# பிறதுறை விருப்பப்பாடம்

# தமிழ் இலக்கிய வரலாறு II

அலகு 1

உரைநடைத் தமிழ்

கவிதை வளம்

இசைத்தமிழ்

நாடகத்தமிழ்

23

# உரைநடைத் தமிழ்

உலக மொழிகள் பலவற்றிலும் உரைநடை தோன்றி வளர்வதற்கு முன்பே பாட்டு தோன்றி உயர்நிலை அடைந்திருக்கிறது. தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில் நமக்குக் கிடைக்கும் சங்க நூல்கள் அனைத்தும் பாடல்களாகவே அமைந்துள்ளன. பாடல்களின் வழி அறிஞர்கள் கருத்துக்களைப் பதிவு செய்திருப்பதற்குக் காரணங்கள் உண்டு.

1. சொல்ல விரும்பிய கருத்துக்களைச் சில சொற்களைப் பயன்படுத்திப் பாட்டிலே உணர்த்துகின்ற திறன்.
2. எதுகை, மோனை அமைப்பினால் பாடல்களை நினைவில் வைத்துக் கொள்வதற்குரிய எளிய வடிவமாகக் கருதியமை.
3. அனுபவத்தையும், உணர்ச்சியையும் பாடல்கள் மூலம் சிறப்பாக வெளிப்படுத்த முடியும் என்ற எண்ணம்.
4. அச்சு சாதனங்கள் தோன்றாத நிலையில் உரைநடையை விடப் பாடல்களை எழுதிக் காத்தல் எளிமையாகவும், சுருக்கமாகவும் அமைந்தது.

இத்தகைய காரணங்களால் பழங்காலத் தமிழ் இலக்கியம் பாடல்களையே மையமாகக் கொண்டது என்றாலும் தமிழில் கிடைக்கும் முதல் நூலான தொல்காப்பியத்தில் தொடங்கி அதன்பின்னர் தோன்றிய பல இலக்கியங்களிலும் உரைநடைக்கூறுகள் காணப்படுகின்றன.

### தொல்காப்பியத்தில்

தமிழில் விளங்கும் மிகப்பழமையான நூல் தொல்காப்பியமாகும். இந்நூலில் பொருளதிகாரம் செய்யுளியலில் உரைநடை பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது. உரைநடையினை நான்காக வகுத்துக் காட்டுகிறார் அவையாவன.

Scanned by CamScanner

1. பாட்டிடை வைத்த குறிப்பு
2. பாவின் றெழுந்த கிளவி
3. பொருளொடு புணராப் பொய்ம்மொழி
4. பொருளொடு புணர்ந்த நகைமொழி

எனத் தொல்காப்பியர் சுட்டிக்காட்டுவது தமிழ் உரைநடையின் வளத்தை உணர்த்துகிறது. முதல் குறிப்பு பாடல்களுக்கிடையே உரைநடை கலந்து வந்த நூல்களைக் குறிக்கிறது. (பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை) இரண்டாவது குறிப்பு தனித்த உரைநடை நூல்களைக் குறிக்கின்றது (உரைநூல்கள்)மூன்றாம், நான்காம் குறிப்புகள் ஒரு பொருள் மட்டுமின்றித் தொடர்ந்து பொய்படச் சொல்லும் நவீனங்களையும் நாடகங்களையும் சிறுகதைகளையும் குறிப்பதாகும்.

இதனால் தொல்காப்பியர் காலத்திலும், அவருக்கு முன்னும் நான்கு வகையான உரைநடை இலக்கியங்கள் இருந்திருக்கின்றன என அறியலாம். மேலும் தொல்காப்பிய நூற்பாக்கள் பல உரைநடை தன்மைகளைப் பெற்றிருப்பதையும் அறிய முடிகின்றது.

**சிலப்பதிகாரத்தில்**

தொல்காப்பியத்தை அடுத்து உரைநடை பற்றிய செய்திகள் இடம் பெறுவது சிலப்பதிகாரத்தில்தான். உரைபெறுகட்டுரை, உரைப்பாட்டு மடை எனக் காப்பியத்தின் இடையிடையே இடம் பெறும் பகுதிகளை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என அழைத்தனர். சிலம்பில் இடம் பெற்றுள்ள உரைநடைப்பகுதிகள் பாட்டினும் கடினமானதாக அமைந்துள்ளது. ஆயினும் நடைச் செறிவும் உயர்வும் பெற்று விளங்குகிறது.

**பல்லவர் காலத்தில்**

பல்லவர் காலத்தில் தமிழ் உரை நடையின் நிலையைக் களவி யலுரை, சாசனங்கள், மணிப்பிரவாளம் என்ற மூன்று நிலைகளில் காண்பது ஏற்புடையதாகும்.

1. களவியலுரையில் இறையனார் களவியல் என்னும் அகப் பொருள் இலக்கண நூலுக்கு நக்கீரர் எழுதிய உரை குறிப்பிடத் தக்கது. பாட்டினை உரையின்றி உணர முடியாத நிலையில் முதல் உரையாகத் தோன்றியது. உரைநடை வரலாற்றில் ஒரு காலகட்டமாகத் திகழ்கிறது. வினாவிடை முறையிலும்,

Scanned by CamScanner

எதுகை, மோனை கொண்ட கவிதை நடையிலும் அமைந்தது. இரண்டடி நூற்பாவுக்கு 60 பக்கஅளவில் முழு உரைநடையாக அமைந்துள்ள திறன் வியப்பிற்குரியது.

2. சாசனங்களில் பல்லவர் காலச் சாசனங்களில் தனித்தமிழின் ஒரு பகுதி வடமொழி, தமிழ் என இருவகையும் ஒருசேர அமைவன, வடசொல் மட்டும் பெய்து வரையப்பட்டவை என மூன்று நிலைகளில் உரைநடை போக்குக் காணப்படுகின்றது.

3. மணிப்பிரவாளம் பல்லவர் காலத்தில் சமணர்களும், பௌத்தர்களும் வடமொழியைத் தமிழில் புகுத்திப் புது உரைநடையை உண்டாக்கினர். முத்தும் பவளமும் சேர்ந்த மாலையைப் போல வடமொழியும் தமிழும் சேர்ந்த கலவை நடை மணிப்பிரவாள நடை எனப்பெயர் பெற்றது. ஸ்ரீபுராணம், கத்ய சிந்தாமணி முதலான சமண நூல்கள் மணிப்பிரவாள நடையில் அமைந்தவை. சமண, பௌத்தர்களுக்குப்பின் இவ்வகை உரைநடையை வைணவச் சான்றோர் வளர்த்தனர் என்றாலும் சிறப்படையவில்லை.

### சோழர் காலத்தில்

சோழர் காலத்தில் உரைநடை குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டது. தத்துவக் கருத்துக்களை மக்கள் நன்குணர, தருக்க முறையில் விளக்க உரைநடை பயன்படுத்தப்பட்டது. பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களின் சிறப்பினை மக்கள் அறிந்து போற்றுவதற்கு ஏற்ற உரைகள் மிகுதியாகத் தோன்றின. தமிழ் உரைநடை வளர்ச்சியின் வழிகாட்டிகளாகச் சோழர் காலத்து உரையாசிரியர்கள் செயல்பட்டுள்ளனர்.

1. உரையாசிரியர்கள் உரைநடை இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் ஆகிய உரையாசிரியர்களின் உரைநடைத் தன்மைகள் குறிப்பிடத்தக்கன.
2. இளம்பூரணர் வினாவிடை, சிறுசிறு வாக்கிய அமைப்பு வடமொழிக் கலப்பின்மை, தெளிவு, சுருக்கம்.
3. பேராசிரியர் இலக்கிய நயம் காட்டல், சிறு வாக்கியம், வினாவிடை தவிர்ப்பு, தெளிவு, இலக்கணக் குறிப்பு.
4. சேனாவரையர் வடமொழி மரபுத் தழுவல் தருக்க முறை.
5. பரிமேலழகர் செறிவு, செம்மை, சிறப்பு, சொற்பொருள் ஆய்தல் பிறர் கருத்தை மறுத்தல்.

Scanned by CamScanner

6. அடியார்க்கு நல்லார் உணர்ச்சி கலந்த ஓசை, நீண்ட வாக்கிய அமைப்பில் தெளிவு.
7. நச்சினார்க்கினியர் இலக்கண நுட்பம், மேற்கோள் காட்டல், முன் உரை மறுப்பு, புலமைத் தெளிவு, ஓசை நயம்

இவ்வாறு தமிழ்உரைநடை வளர்ச்சியில் உரையாசிரியர்களின் பங்களிப்பும் பணியும் சிறப்புடன் அமைகிறது. பொதுவாக உரையாசிரியர்களின் நடையைச் செயற்கை நடையாகக் கருதலாம். தற்கால உரைநடையின் ஏற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் காரணமாக அமைந்தது உரையாசிரியர்களின் உரைநடைப் பணி எனலாம்.

### நாயக்கர் காலத்தில்

உரைகளின் மூலம் உரைநடையை வளர்க்கும் பணி தொடர்ந்தது. நாயக்கர் காலத்தில் அழகிய தேசிகர் திருவருட்பயனுக்கு எளிய நடையில் உரை வகுத்தார். மயிலேறும் பெருமாள் கல்லாடத்திற்கும் சங்கர நமச்சிவாய புலவர் நன்னூலுக்கும் செறிவான உரையைத் தந்தனர். இலக்கண விளக்க ஆசிரியர் வைத்தியநாத தேசிகர், இலக்கணக் கொத்து சாமிநாத தேசிகர், பிரயோக விவேகம் சுப்பிரமணிய தேசிகர் மூவருடைய நடையும் பண்டைய இலக்கிய நடையினை அடிப்படையாகக் கொண்டவை.

### ஐரோப்பியர் காலத்தில்

ஐரோப்பியர்களின் வரவும், அச்சுப்பொறிகளின் கண்டு பிடிப்பும் தமிழ் உரைநடை வளர்ச்சியில் புதிய எழுச்சியை ஏற்படுத்தியது. இயற்கையான உரைநடை தோன்றியது. Prose எனக் கருதுதற்குரிய உண்மையான உரைநடை உருவானது. இந்திய மொழிகளிலேயே உரைநடை நூல் முதன் முதல் தோன்றியது தமிழ் மொழியில்தான். 1577இல் வெளியான 'கிறிஸ்துவோபதேசம்' என்ற நூலே தமிழில் அச்சான முதல் நூல் என்கிறார் கால்டுவெல். தனி நாயக அடிகள், 16 பக்கங்கள் கொண்ட 1579 இல் வெளியான 'தம்பிரான் வணக்கம்' எனும் நூலே தமிழில் தோன்றிய முதல் நூல் என்கிறார்.

### பதினேழாம் நூற்றாண்டில்

தமிழ் மக்களிடம் கிறித்தவ சமயக்கருத்துக்களைப் பரப்ப உரைநடையே ஏற்ற வடிவம் எனக் கருதினர். தத்துவ போதகர் (Robert Nobile) பல உரைநடை நூல்கள் எழுதினார். அவை ஏசுநாதர் சரித்திரம் தத்துவக்

கண்ணாடி, ஆத்தும நிர்ணயம் முதலியன. இவையனைத்தும் முழுவதும் உரைநடையால் ஆனவை. இக்காலத்தில் வாழ்ந்த ஆனந்தரங்கம் பிள்ளை எழுதிய நாட்குறிப்பு தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிட வேண்டிய ஒன்று. இவருடைய வசனம் பேச்சுத் தமிழ் வசனமாகவும், பலவிதமான வார்த்தை ஜாலங்கள் நிறைந்ததாகவும், ஆர்வமுடன் படித்து மகிழக்கூடியதாகவும் அமைந்துள்ளது. இந்நூற்றாண்டில் தமிழ் அறிஞரான சிவப்பிரகாச சுவாமிகள் 'தருக்க பரிபாஷை' என்னும் உரைநடை நூலை எழுதினார். கி.பி. 17ஆம் நூற்றாண்டு முதல் கருத்தை உணர்த்தும் கருவியாக உரைநடை பயன்படுத்தப்பட்டதால் தமிழ் இலக்கியம் புது மலர்ச்சியைக் கண்டது.

## பதினெட்டாம் நூற்றாண்டில்...

18ஆம் நூற்றாண்டில் தமிழ் உரைநடையை வளர்த்தவர்களில் வீரமாமுனிவரும், சிவஞான முனிவரும் குறிப்பிடத் தகுந்தவர்கள் உரைநடையில் பல புதுமைகளைச் செய்தனர்.

### 1. வீரமாமுனிவர்

தெளிவான நடையில் எழுதத் தொடங்கினார். இவருடைய நடை முத்திறத்தது. உரையாசிரியர் நடையினை அடியொற்றி உயர்ந்த நடையில் படைத்தது தொன்னூல் விளக்கம். பேச்சுத்தமிழைப் பின்பற்றி எளிய நடையில் தந்தது வேதியர் ஒழுக்கம். சமயப் பரப்பலுக்காக தனக்கென தனி நடைஅமைத்துக் கொண்டு இயற்றியது பரமார்த்த குரு கதை. இவருடைய பணியால் உரைநடை தனியொரு இலக்கிய வகையாகப் பரிணாமம் பெற்றது. உரைநடையில் இலக்கியங்கள் பலவற்றைப் படைத்து 'தமிழ் உரைநடையின் தந்தை' என்றும் 'தமிழ் உரைநடை இலக்கியத்தின் தோற்றுநர்' என்றும் பெயர் பெற்றார். இவருடைய இலக்கிய நடை அனைவர்க்கும் உரிய எளிய நடையாக அமைந்துள்ளது தனிச்சிறப்பு.

### 2. சிவஞான முனிவர்

தமிழ்ப்புலவர் மரபில் தேர்ந்த சிவஞானமுனிவரும் இக்காலத்தவரே. தூய தமிழ் நடையில் எழுதினார். சிவஞான போதத்திற்கு எழுதிய சிற்றுரையும், பேருரையும், தொல்காப்பியப் பாயிரவிருத்தி, முதற்சூத்திர விருத்தி என்பனவும் இவருடைய உரையழகுக்குச்சான்றுகள். இவருடைய நடையில் உணர்ச்சியும் வேகமும் விறுவிறுப்பும் மிகுதி. இக்காலத்தில் விக்ரமாதித்தன் கதை, பன்னிரண்டு மந்திரிகதை, இராமாயண, மகாபாரதக்

Scanned by CamScanner

கதைகளும் தோன்றின. இந்நூல்களின் தோற்றத்தால் உரைநடை இலக்கியத்திற்கு 18ஆம் நூற்றாண்டில் கிடைத்த வரவேற்பை உணரலாம்.

## பத்தொன்பதாம் நூற்றாண்டில்...

18ஆம் நூற்றாண்டின் தொடர்ச்சியாகப் பழங்கால இதிகாச, புராணக் கதைகள் 19ஆம் நூற்றாண்டில் உரைநடையில் வெளிவந்தன. உரைநடையைப் படிக்கும் பழக்கம் மிகுந்தது. தாண்டவராய முதலியார், ஆறுமுக நாவலர், இராமலிங்க அடிகள், வீராசாமி செட்டியார், வேத நாயகம் பிள்ளை ஆகியோரின் உரைநடைப் பணி 19ஆம் நூற்றாண்டில் குறிப்பிடத் தக்கது.

### 1. தாண்டவராய முதலியார்

இந்த நூற்றாண்டின் 'உரைநடை இளவரசு' எனப் போற்றப்படுபவர். 1826இல் வெளியான பஞ்சதந்திரக்கதை தலையானது, நகைச்சுவை மிக்க நீதிக்கருத்துகள் நிறைந்த தெளிவான நடையைக் கொண்டது. மேனாட்டறிஞர் கால்டுவெல் இவருடைய நடையை மிகவும் சிறப்பித்துக் கூறுகின்றார்.

### 2. ஆறுமுக நாவலர்

19ஆம் நூற்றாண்டில் உரைநடை வேந்தராக ஒளிர்பவர். உரைநடைக்கு ஒரு வடிவினைத் தந்தவர். இலக்கண வழுவில்லாமல் எளிய இனிய நடையைத் தந்து வழி காட்டியவர். குறியீட்டு முறைகளை உரைநடையில் அறிமுகப்படுத்தினார். 'நாவலர் நடை' என ஒரு தனி நடையை உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு. 'தமிழ்க்காவலர்' எனவும், 'தற்காலத் தமிழ் உரைநடையின் தந்தை' எனவும் போற்றப் படுகின்றார். திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், கந்தபுராணம் ஆகியவற்றுக்குச் சிறந்த வசனம் எழுதி 'வசன நடை கைவந்த வல்லாளர்' என்ற பெயரையும் பெற்றார்.

### 3. சி.வை.தாமோதரம்பிள்ளை

இவர் யாழ்ப்பாணம் சிறுபட்டியைச் சேர்ந்தவர். பழைய ஓலைச் சுவடிகளைத் தேடிக் கண்டுபிடித்துப் பதிப்பித்த பெருமை இவருக் குண்டு. சூளாமணி, கலித்தொகை, திருத்தணிகைப் புராணம் முதலிய இலக்கியங்களையும், தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், வீரசோழியம், இலக்கண விளக்கம் முதலான இலக்கண நூல்களையும் உரையுடன் பதிப்பித்த சிறப்புக்குரியவர்

Scanned by CamScanner

**4. இராமலிங்க அடிகள்**

மனு முறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம், உண்மை நெறி போன்றவை மிக நீண்ட வாக்கியங்களில் கற்றோர்க்கே புரியும் சொற்களைக் கொண்டு இலக்கண வரையறையுடன் கூடிய நூல்களாக விளங்குகின்றன.

**5. வீராசாமி செட்டியார்**

இராமலிங்க அடிகளாரைப் போன்று நீண்ட வாக்கியங்களில் எழுதினாலும் வழக்குச் சொற்களைக் கொண்டு உவமை, பழமொழிகள் ஆகியவற்றை இடையிடையே கலந்து நகைச்சுவை உணர்வு மேலோங்கும் வகையில் எழுதும் வல்லமை பெற்றவர். இவரது 'விநோதரசமஞ்சரி' முதன்மையான உரைநடை இலக்கியமாக இன்றும் போற்றப்படுகின்றது.

**6. வேதநாயகம் பிள்ளை**

மக்களின் பேச்சு வழக்கினை மனத்தில் கொண்டு இலக்கண வரம்பு மீறாது ஆற்றொழுக்கான வாக்கிய அமைப்பில் தெளிவான நடையில் எழுதியவர் வேதநாயகம் பிள்ளை. இவருடைய பிரதாப முதலியார் சரித்திரமும், சுகுண சுந்தரியும் இவ்வகையின. ஓசை நலமும் கவிதை ஓட்டமும் உடைய ஓர் உணர்ச்சி நடையினை உருவாக்கிய மற்றொருவர் கமலாம்பாள் சரித்திரம் தந்த ராஜமையர். இவ்விருவரும் இருபதாம் நூற்றாண்டு உரைநடைக்கு வித்திட்டவர்கள்.

**7. இன்னும் சிலர்**

தஞ்சைவாணன் கோவைக்கு உரை வகுத்த சொக்கப்ப நாவலரின் நடை தெளிவும், தனித்துவமும் வாய்ந்தது. பால போத இலக்கணம், கல்விப்பயன் எழுதிய விசாகப் பெருமாளையர், திருவள்ளுவ மாலைக்கு உரை செய்த சரவண பெருமாளையர், திராவிடப் பிரகாசிகை தீட்டிய சபாபதி நாவலர் போன்றோரும் 19ஆம் நூற்றாண்டு உரைநடை வளர்ச்சியில் சுட்டத் தகுந்தவர்கள் ஆவர்.

### இருபதாம் நூற்றாண்டில்...

இருபதாம் நூற்றாண்டில் உரைநடை பெருஞ்செல்வாக்குப் பெற்றது. சங்க காலத்தில் கவிதைக்கு இருந்த மதிப்பு இக்காலத்தில் உரை நடைக்குக் கிடைத்தது. உரைநடை இலக்கியத்தின் உச்ச காலமாகவும்,

Scanned by CamScanner

பொற்காலமாகவும் திகழ்ந்தது. மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற் கேற்பவும், மேலைநாட்டுக்கல்வியின் பயனாகவும் உள்ளஉணர்வுகளைப் பல்வேறு வகைகளில் வெளிப்படுத்தும் ஆர்வத்தின் காரணமாகவும் உரைநடையில் மாறுபாடுகளும், புதிய நடைகளும் தோன்றி வளர்ந்தன, படைப்பாளர்கள் தங்களைத் தனித்துவத்தோடு அடையாளப்படுத்திக் காட்டவும், வேறுபடுத்திக் காட்டவும் உரைநடையைக் கருவியாகக் கையாளத் தொடங்கினர்.

இந்நூற்றாண்டில் உரைநடையை வளர்த்த, உரைநடையால் வளர்ந்த தமிழறிஞர்களின் பட்டியல் நீளமானது. அவர்களுள் பாரதியார், உ.வே.சாமிநாதய்யர், மறைமலையடிகள், திரு.வி.க. தேவநேயப் பாவாணர், இளவழகனார், டாக்டர் வ.சுப. மாணிக்கம், பண்டிதமணி கதிரேசனார், வெ. சாமிநாத சர்மா, கா.சு.பிள்ளை. கல்கி, புதுமைப் பித்தன், மௌனி, அறிஞர் அண்ணா, கருணாநிதி ஆகியோரின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கது.

1. **பாரதியார்**

தமிழ்கவிதையைப் புதுப்பித்து உயிர்ப்பூட்டியது போன்று உரைநடையிலும் முத்திரை பதித்து மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். "சிறிய தானியம் போன்ற மூக்கு, சின்னக் கண்கள், சின்னத்தலை, வெள்ளைக் கழுத்து, அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்திய வயிறு, இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன" என்ற இப்பகுதி பாரதியின் வருணனைத் திறனையும், நடைப்புதுமையும் விளக்குவதற்குப் போதிய சான்றாகும்.

2. **உ.வே. சாமிநாதைய்யர்**

தமிழ்த்தாத்தா என்றழைக்கப்படும் இவர் பொதுமக்களுக்குப் புரியும் வகையில் எளிய நடையில் பேச்சு வழக்குச் சொற்களைப் பயன்படுத்தி மரபு பிறழாது எழுதினார். தம்முடைய வாழ்க்கை அனுபவங்களையும், சிந்தனைகளையும் வெளியிடுவதற்கு உரைநடையைச்சிறப்பாகப்பயன்படுத்தினார். என்சரிதம், மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம், தியாகராசச் செட்டியார் சரித்திரம், நல்லுரைக் கோவை, நினைவு மஞ்சரி என்பன இவர் படைத்தளித்த சிறந்த நூல்களாகும்.

**உரைநடை வேந்தர்கள் இருவர்**

இருபதாம் நூற்றாண்டில் உரைநடை வேந்தர்களாகத் திகழ்ந்தவர்கள் மறைமலையடிகளும், திரு.வி.கல்யாண சுந்தரரும் ஆவர்.

Scanned by CamScanner

### 3. மறைமலையடிகள்

தனித்தமிழ் நடையின் தந்தை. தனித் தமிழ் இயக்கம் கண்டவர். வடமொழியின் துணையின்றித் தமிழால் எதையும் உணர்த்த முடியும், பேச முடியும், எழுத முடியும் என்பதை நிலை நாட்டியவர். பிற மொழிக் கலப்பால் தமிழின் தூய்மையும், தனித் தன்மையும் கெடும் என்பதை யறிந்து 1916இல் தனித்தமிழ் இயக்கம் கண்டவர். இவருடைய தனித்தமிழ்ப் பார்வை புதிய தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தும் ஆர்வத்தை அறிஞர்களிடையே ஏற்படுத்தியது. மாணிக்க வாசகர் வரலாறும் காலமும், பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம், முல்லைப்பாட்டு ஆராய்ச்சி உரை, பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை முதலியன இவருடைய உரைநடைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் நூல்களாகும். இவரைப் பின்பற்றி இளவழகனார், தேவநேயப் பாவாணர், பெருஞ்சித்திரனார், டாக்டர்.வ.சுப.மாணிக்கம் போன்றோர் நூல்களைப் படைத்தனர்.

### 4. திரு.வி. கல்யாண சுந்தரனார்

மென்தமிழ் உரைநடையின் முதல்வராக விளங்குகிறார். தமிழைக் கடந்து சமூகம், பொருளாதாரம், அரசியல் முதலிய துறைக் கருத்துக் களைத் தமிழில் எளிய முறையில்சொல்ல முடியும் என மெய்ப்பித்தவர். செந்தமிழ் நடையினை மக்கள் நடையாக மாற்றிய அதே நேரத்தில் தமிழ் மரபுகெடாது எழுதிய-பேசிய பேரறிஞர். ஐயங்களை எழுப்பிச் சிந்தனையைத் தூண்டுவதும், வினா எழுப்பி விடை தருவதும் இவருடைய நடையின் தனிச்சிறப்பு. திருத்தமான தமிழுக்குப் பொருத்த மான வடிவம் தந்து நல்ல தமிழ் நடையினை நிலைக்கச் செய்தவர். முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், தமிழ்த்தென்றல், சைவத்தின் சமரசம் முதலிய நூல்களைப் படைத்துத் தமிழுக்கு வளம் சேர்த்தவர். இவரைப் பின்பற்றி டாக்டர் மு.வரதராசனார், கு.ராஜவேலு, ம.ரா.போ. குருசாமி போன்றோர் நூல்கள் எழுதிப் புகழ் பெற்றனர்.

### 5. வ.சுப. மாணிக்கம்

'பழந்தமிழ் இலக்கியத்தில் காதல்' என்ற பொருளில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். மதுரைப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராய் சிறக்கப்பணி செய்த தமிழறிஞர். தொல்காப்பியத்திலும், வள்ளுவத்திலும் தேர்ந்த பயிற்சியுடையவர். பல உரைநடை நூல்களைத் தமிழுக்குத் தந்தவர். அவற்றுள் வள்ளுவம், தமிழ்க்காதல், தொல்

Scanned by CamScanner

காப்பியப் புதுமை, கொடைவிளக்கு, எந்தச் சிலம்பு, சிந்தனைக் களங்கள், இலக்கிய விளக்கம், ஒப்பியல் நோக்கு, கம்பர் போன்றவை குறிப்பிடத் தக்கன.

6. மு. வரதராசன்

தமிழ்த்தென்றல் திரு.வி.க.வின் சீடர். காந்தியச் சிந்தனை மிக்கவர் 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்ற பொருளில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றிய மற்றொரு தமிழாசான். சங்க இலக்கியம் தொடங்கித் தற்கால இலக்கியம் வரையிலான இவருடைய படைப்புகள் மிகப் பல. புதினம் 13, சிறுகதைத் தொகுதி 2, சிந்தனைக் கதை 2, நாடகம் 6, கட்டுரை இலக்கியம் 11, கடித இலக்கியம் 4, சிறுவர் இலக்கியம் 4, பயண இலக்கியம் 1, இலக்கிய வரலாறு 1, மொழியியல் 6, வாழ்க்கை வரலாறு 4, இலக்கிய நூல்கள் 24, சிறுவர் இலக்கணம் 3, ஆங்கில நூல் 2, மொழி பெயர்ப்பு 2 எனப் பல்துறைகளிலும் சாதனை படைத்தவர். அகல்விளக்கு என்ற புதினமும், தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலும் இவருக்கு இருமுறை சாகித்ய அகாதெமி பரிசைப் பெற்றுத்தந்தன. தமிழ்உரைநடை வளர்ச்சியில் மு.வ.வின் பங்களிப்பு மகத்தானது.

7. பண்டிதமணி கதிரேசன் செட்டியார்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியவர். சிரிக்க வைத்துச் சிந்திக்கச் செய்யும் பேச்சாற்றல் மிக்கவர். வடமொழிப் புலமை மிக்கவர். இவரது உரைநடை தனிநடை. 'பண்டிதமணி நடை' என்ற பெயர் பெற்று விளங்கியது. மண்ணியல் சிறுதேர், மாலதி மாதவம், கௌடிலீயம், சுக்கிரநீதி, பிரதாபருத்திரீயம் முதலிய நூல்களை வடமொழியில் இருந்து தமிழுக்கு மொழி பெயர்த்தார். இவருடைய திருவாசக விரிவுரை சித்தாந்த வளம் செறிந்தது. உரைநடைக் கோவை, உதயணன் கதை, சுலோசனை போன்ற நூல்கள் உயர்ந்த உரைநடைத் தன்மைகளைப் பெற்ற நூல்களாகும்.

8. வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார்

வை.மு.கோ. உரை என தனித்துப் பேசப்படும் நிலையில் உரை எழுதுவதில் முத்திரை பதித்தவர். கம்பராமாயணத்திற்கு இவருடைய உரை இன்றளவும் மிகச்சிறந்ததாக மதிக்கப்படுகிறது. தமிழ்ப் பேரகராதிக் குழுவில் பணியாற்றிய இவர் பத்துப்பாட்டு, திருக்குறள், தண்டியலங் காரம், வில்லிபாரதம் ஆகிய நூல்களுக்கும் உரை தந்துள்ளார்.

Scanned by CamScanner

9. கா. சுப்பிரமணியப் பிள்ளை

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். நல்ல கட்டுரையாளர், இனிய சொற்பொழிவாளர், சைவ சமயத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர். பல்கலைப் புலவர் என்ற பட்டம் பெற்றவர். இவர் பல வகையான நூல்களைப் படைத்துள்ளார். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார், மெய்கண்டார், தாயுமானவர் வரலாறுகள், திருவாசகக் குறிப்புரை, திருக்குறள் பொழிப் புரை, பழந்தமிழர் நாகரிகம், உலக பெருமக்களும் மொழி நூற்கொள்கை யும், மெய்கண்டாரும் சிவஞான போதமும் போன்றவை குறிப்பிடத் தகுந்த நூல்களாகும்.

10. நாவலர் சோமசுந்தர பாரதியார்

விடுதலைப் போராட்டவீரர். தொல்காப்பியம், குறள், சிலம்பு, கம்பராமாயனம் நான்கிலும் நல்ல பயிற்சி உடையவர். வள்ளுவர் வரலாற்றைச் செறிவாகத் தந்தவர். தொல்காப்பியம் அக, புற மெய்ப்பாட்டியல்களுக்குப் புதிய உரை படைத்தவர். வீரத்தோடு தமிழ் பேசும் சிறந்த பேச்சாளர். இவருடைய நடை கடுமையானது என்றாலும் செறிவானது. திருவள்ளுவர், சேரர் தாயமுறை, சேரர் பேரூர், தசரதன் குறையும் கைகேயி நிறையும் போன்றவை இவருடைய நூல்களும்.

11. இரா.பி.சேதுப்பிள்ளை

சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் பணியாற்றி யவர். சொல்லாராய்ச்சியில் வல்லவர் Tamil words and their significance என்பது இவரது நூலாகும். சொல்லின் செல்வர் என்றழைக்கப் படுபவர். தமிழின்பம், ஊரும் பேரும், செந்தமிழும் கொடுந்தமிழும், திருவள்ளுவர் நூல் நயம், சிலப்பதிகார நூல் நயம், தமிழ் விருந்து, வேலும் வில்லும், தமிழ்நாட்டு நவமணிகள் போன்றவை இவர் படைத்திட்ட நூல்களுள் சிலவாகும். தமிழின்பம் சாகித்ய அகாதெமி பரிசு பெற்ற முதல் நூல் என்ற சிறப்பினைப் பெறுகிறது.

12. இரா. இராகவையங்கார்

கவிதை, மொழிபெயர்ப்பு, உரை ஆராய்ச்சி, சமயம், வரலாறு, மொழியியல் எனப் பல துறைகளில் தன்னுடைய பங்களிப்பைச் செலுத்தி யவர். பன்னிரு பாட்டியல், நேமிநாதம், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது முதலிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். சேது நாடும் செந்தமிழும், தமிழ் வரலாறு, வஞ்சி மாநகர் போன்ற உரைநடை நூல்களைத் தந்தவர். சிறந்த கவிஞராகவும் விளங்கியவர்.

Scanned by CamScanner

### 13. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியராகவும், மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராகவும், திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் மொழியியல் சிறப்பாய்வாளராகவும் பணியாற்றிய பெருமைக்குரியவர். பல்கலைச் செல்வர், பன்மொழிப்புலவர், பெருந் தமிழ் மணி, நடமாடும் பல்கலைக் கழகம், பத்மபூஷண் ஆகிய பட்டங் களைப் பெற்றவர். இவரை ஆய்வு வழிகாட்டியாகக் கொண்டு நூற்றுக் கணக்கானோர் டாக்டர் பட்டங்களைப் பெற்றுள்ளனர். தனக்கென ஓர் ஆய்வுப் பரம்பரையை உருவாக்கிய ஆற்றல் மிக்கவர். தமிழில் எதைப் பற்றி வேண்டுமானாலும் பேசுவார், எழுதுவார். ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்தவர். வள்ளுவரும் மகளிரும், அன்பு முடி, பிறந்தது எப்படியோ, தமிழா நினைத்துப்பார், நீங்களும் சுவையுங்கள், வள்ளுவர்கண்ட நாடும் காமமும், நற்றிணை நாடகங்கள், கானல்வரி, குடிமக்கள் காப்பியம், சமணத் தமிழ், இலக்கிய வரலாறு, பாட்டிலே புரட்சி, திருப்பாவை திருவெம்பாவை, வாழும் கலை போன்றவை குறிப்பிடத்தக்கன.

### 14. மா.இராசமாணிக்கனார்

மதுரைத் தியாகராசர் கல்லூரியிலும், சென்னைப் பல்கலைக் கழகத்திலும் பணியாற்றியவர். தமிழ் நெறியையும், வைணவ நெறியையும் இரு கண்களாகவும் கல்வெட்டையும் வரலாற்றையும் இரு கால்களாகவும் கருதி உழைத்தவர். அகழ்வாய்வு செய்த அறிஞர். மொகஞ்சதரோ, பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு, தமிழக ஆட்சி கலைகள் வரலாறு, தமிழகத்தின் வட எல்லை, தமிழர் திருமணத்தில் தாலி, திருக்கோயில் கல்வெட்டுக்களில் அரசியல், கம்பர் யார்? திருவள்ளுவர் காலம் என்பன இவர் படைத்தளித்தவை. இல்வாழ்க்கை, ஆற்றங்கரை நாகரிகம் என்று சமயம், வரலாறு, இலக்கியம் ஆகிய பல துறைகளில் நூல்கள் படைத்தளித்த சிறப்புக்குரியவர்.

### 15. ஞா. தேவநேயப் பாவாணர்

'மொழி ஞாயிறு' என்று போற்றப்படும் பேரறிஞர். இலக்கியம் இலக்கனம்,மொழி வரலாறு, மொழியியல், இலக்கிய வரலாறு எனப் பல துறைகளில் முத்திரை பதிப்பித்தவர். முதல் தாய் மொழி, திராவிடத் தாய், வடமொழி வரலாறு, தமிழ் வரலாறு, திருக்குறள் தமிழ் மரபுரை, இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும், வேர்ச் சொற்கட்டுரைகள், பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும் போன்ற நூல்களைப் படைத்தவர். 'உலகத்

Scanned by CamScanner

தமிழ்க் கழகம்' கண்ட இவரின் உண்மையான தமிழ்ப் பணியையும் பற்றையும் வியந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரன் இவரை 'தமிழ்த் தெய்வமாகப்' போற்றுவது சுட்டத்தக்கது.

**16. சி. இலக்குவனார்**

உசுமானியா பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணி யாற்றியவர். 'தமிழ்ப் பாதுகாப்புக்கழகம்' தொடங்கியவர். 'தொல் காப்பியன்' என்ற புனைபெயரில் எழுதியவர். 'குறள் நெறி' இதழ் மூலம் தமிழின் பெருமையை எடுத்துக்கூறியவர். வள்ளுவர் வகுத்த அரசியல், வள்ளுவர் கண்ட இல்லறம், பழந்தமிழ், தொல்காப்பிய ஆராய்ச்சி விளக்கம், இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் முதலான நூல்களைத் தந்தவர்.

**17. ந.மு.வேங்கடசாமி நாட்டார்**

திருச்சி பிசப் ஈபர் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராகவும் அதன்பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் பணி புரிந்தார். ஆலால சுந்தரம் செட்டியார், அ.ச.ஞானசம்பந்தன், வ.சுப. மாணிக்கம் போன்ற தமிழறிஞர் இவருடைய மாணவர்கள் என்பது சுட்டத்தக்கது. வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி, நக்கீரர்,கபிலர், கள்ளர் சரித்திரம், கண்ணகி வரலாறும் கற்பு மாண்பும், சோழர் சரித்திரம், கட்டுரைத் திரட்டு போன்ற உரைநடை நூல்களையும், சிலம்பு, மேகலை, அகநானூறு, தண்டி,யாப்பு போன்ற நூல்களுக்கு உரைகளையும் தந்தவர்.

**18. வையாபுரிப்பிள்ளை**

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழப் பேராசிரியராகப் பணியாற்றி யவர். தமிழாராய்ச்சியில் பல முடிவுகளை எடுத்தவர். பாடபேதங்களை நீக்கி நூல்களைச் செறிவாகப் பதிப்பித்தவர். இலக்கியப் புலமையும், கால ஆராய்ச்சி நுட்பமும் மிக்கவர். தமிழ்ச்சுடர் மணிகள், சொற்கலை விருந்து, காவிய காலம், தமிழின் மறுமலர்ச்சி, தமிழர் பண்பாடு, உலக இலக்கியங்கள் A History of Tamil Language and Literature, கம்பன் காவியம், இலக்கணச் சிந்தனைகள் போன்ற நூல்களைப் படைத்தவர்.

**19. தி.வை.சதாசிவ பண்டாரத்தார்**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியவர். தமிழக வரலாறு, இலக்கிய வரலாறு இரண்டிலும் புலமை மிக்கவர். கல்வெட்டு ஆராய்ச்சியில் தேர்ந்தவர். தொல்காப்பியப் பாயிரவுரை, முதற் குலோத்துங்கன், பாண்டியர் வரலாறு, சோழர் வரலாறு, கல்வெட்டு களால் அறியப் பெறும் உண்மைகள், காவிரிப்பூம்பட்டினம், செம்பியன்

Scanned by CamScanner

மாதேவி, தமிழ் இலக்கிய வரலாறு ஆகிய நூல்களைப் படைத்தவர். ஆராய்ச்சிப் பேரறிஞர் பட்டம் பெற்றவர்.

20. மு. இராகவையங்கார்

செந்தமிழ் என்னும் இதழின் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் தமிழாய்விற்குத் தடம் அமைத்துக் கொடுத்தவர். வேளிர் வரலாறு, சேரன் செங்குட்டுவன் போன்றவை மிகச் சிறந்த ஆய்வு நூல்களாகும். ஆழ்வார்கள் காலநிலை, சாசனத் தமிழ்க்கவி சரிதம் ஆகிய நூல்களும் இவருடையன. பதிப்புப்பணியிலும் தம்மை இணைத்துக் கொண்டவர்.

21. அ.கி. பரந்தாமனார் - அ.மு.பரமசிவானந்தம்

மதுரை தியாகராசர் கல்லூரியில் பணியாற்றியவர். அ.கி.ப. தமிழ் வாசகம், திருவள்ளுவர் செந்தமிழ் வாசகம், நவீன தமிழ் இலக்கியக் கோவை, நல்ல தமிழ் எழுத வேண்டுமா? பேச்சாளராக, மதுரை நாயக்கர் வரலாறு, திருமலை நாயக்கர் வரலாறு, திருக்குறளும் புதுமைக் கருத்துக்களும் என்பன இவருடைய நூல்களாகும். பச்சையப்பன் கல்லூரியிலும், உசுமானிய பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராகப் பணி யாற்றியவர் அ.மு.ப. கவிதையுள்ளம் (கவிதை) கறைபடிந்த உள்ளம் (சிறுகதை) துன்பச் சூழல் (நாவல்) கவிதையும் வாழ்க்கையும், தமிழக வரலாறு. சமுதாயமும் பண்பாடும், தமிழ் உரைநடை வரலாறு போன்ற நூல்களைப் படைத்தவர்.

22. மயிலை சீனி. வேங்கடசாமி

பல்துறை அறிஞர் பிறரால் புறக்கணித்து ஒதுக்கப்பட்ட பகுதிகளில் தன்னுடைய கவனத்தைச் செலுத்தியவர். இவருடைய 'மறைந்து போன தமிழ் நூல்கள்' தனித்துச் சுட்டத் தக்கது. சமய ஆராய்ச்சியிலும் ஈடுபாடு கொண்டவர் என்பதற்குச் சான்று பகர்வது எழுவகைத் தாண்டவம் எனும் நூலாகும். இந்நூல் சிவனது ஆடல் பெருமையை உணர்த்துவது. தமிழர் வளர்த்த அழகுக்கலைகள், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், கிறித்தவமும் தமிழும், அஞ்சிறைத்தும்பி, புத்த ஜாதகக் கதைகள், இறை யனார் களவியல் ஆராய்ச்சி முதலியன இவருடைய சிறந்த நூல்களாகும்.

23. வெ. சாமிநாதசர்மா

தமிழில் உயிர்த்துடிப்பான தூய தமிழ் என்ற நினைவுக்குள் அடங்காமல் அமைந்த நடையும் உண்டு. இந்நடையினை மேற் கொண்டோர் பலர். சர்மா எழுதிய அரசியல், பொருளாதாரம், வரலாறு பற்றிய பல்வேறு நூல்களை இத்தகைய நடைக்குச் சான்றாகக் கூறலாம். இவர் மொழி பெயர்த்த சமுதாய ஒப்பந்தம் உயர்ந்தது சிறந்தது.

Scanned by CamScanner

24. கல்கி. ரா.கிருஷ்ணமூர்த்தி

சுதந்திரப் போராட்ட தீரர். இதழ்கள் வழி இலக்கியம் வளர்த்தவர். முப்பது ஆண்டு காலம் இதழியல் பணி செய்த பெருமைக்குரியவர். முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார். புத்திலக்கியத் துறையில் புதுமைகள் செய்தவர். சிறுகதை, நாவல், கட்டுரை, திறனாய்வு, பயண இலக்கியம், கலைத்துறை முதலான பல துறைகளில் சுவடுகள் பதித்தவர். கர்நாடகம், தமிழ்மகன், தமிழ்த்தேனீ, அகஸ்தியர், யமன், விவசாயி, லாங்கூலன் போன்ற புனைபெயர்களில் படைப்புகள் தந்தவர். மாந்தருக்குள் ஒரு தெய்வம், பாரதி பிறந்தார் முதலியன இவருடைய சில நூல்களாகும்.

25. நா. வானமாமலை

இலக்கியம், வரலாறு, சமூகவியல் போன்ற துறைகளில் கவனம் செலுத்தியவர். ஆராய்ச்சி எனும் பெயரில் காலாண்டு இதழ் நடத்தியவர். நாட்டுப்புற இலக்கியத்தைப் பேணி வளர்த்தவர். தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள், கட்டபொம்மன் கதைப்பாடல், இயற்கைச் செல்வங்கள், குடும்ப இன்பம், உயிரியல் மருத்துவ வளர்ச்சி, ஒப்பிலாத சமுதாயம் போன்ற நூல்களை ஆக்கியவர்.

26. அறிஞர் அண்ணா

இன்றைய மேடைத் தமிழுக்கும் நாடகத் தமிழுக்கும், உரைநடை மறுமலர்ச்சிக்கும் வளமூட்டியவர் பேரறிஞர் சி.என். அண்ணாதுரை யாவார். எதுகை மோனை அடுக்கு மொழி நிறைந்த இவரது எழுத்தும் பேச்சும் மிக இனிமையுடையவை. பல நூல்களைப் படைத்தவர் நாடகத் தமிழில் இவரைப் பற்றிக் காண்பது பொருத்தமாகும்.

27. குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி ஆதினத் தலைவராகத் திகழ்ந்தவர். அரங்கநாதன் என்பது இவரது இயற்பெயராகும். ஆதீனமாகப் பொறுப்பேற்ற பிறகு இவருக்குச் சூட்டப்பெற்ற பெயர் 'திருப்பெருந்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்' என்பதாகும். ஆனால் 'அடிகளார்' என்ற பெயராலேயே அன்போடு அழைக்கப்பட்டார். மக்களால் மதிக்கப்பட்டார். சமயத்தை அறிவியல் முறையில் அணுகிய முற்போக்கான துறவியாகத் திகழ்ந்தவர். மனிதம் பேணும் மடாதிபதி, பேச்சாளருக்கு இலக்கணம் வகுத்தவர். எழுத்தாளர், நூலாசிரியர் எனப் பன்முகப்பரிணாமங்களைப் பெற்றவர்.

Scanned by CamScanner

திருக்குறள் மீது அளவு கடந்த பற்று உடையவர். வள்ளுவர் உலகம், குறட் செல்வம், குறள் வாழ்வு, அடிகளார் பொன் மொழிகள், அப்பர் அமுது, திருவாசகத் தேன் முதலிய நூல்களை எழுதியவர். இவருடைய எழுச்சி மிகு செயலைக் கண்டு வியந்த தந்தை பெரியார் தமிழர்கள் அனைவரும் தவத்திரு அடிகளாரை மதிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் என்பது குறிப்பிடப்பட வேண்டிய செய்தியாகும்.

**இன்னும் பலர்**

மேற்குறித்தவர்கள் மட்டுமின்றித் தமிழ் உரைநடைக்கு வளம் சேர்த்தவர்களின் பட்டியல் நீண்டது. அ. சிங்காரவேலு முதலியார், தி.செல்வ கேசவராய முதலியார், கே.என். சிவராஜ பிள்ளை, சாமி சிதம்பரனார், ஔவை. துரைசாமிப்பிள்ளை, மு. அருணாசலம் பிள்ளை, கி.வா.ஜகந்நாதன், தண்டபாணி தேசிகர், தா.ஏ.ஞானமூர்த்தி, ந. சுப்புரெட்டியார், கா. மீனாட்சி சுந்தரம், ம.பொ.சி. போன்றோரும் பல நூல்களைப் படைத்துத் தமிழ் உரைநடையை உச்சத்திற்குக் கொண்டு சென்றார்கள். புதுமைப் பித்தன், மௌனி போன்றோரின் எழுத்துக்களும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

**இன்றைய உரைநடை எழுத்தாளர்கள்**

உரைநடையின் வீச்சும் போக்கும் மிக ஆழமாகச் சென்று கொண்டிருக்கிறது. வளர்ந்து வரும் பல்துறைப் பெருக்கத்திற்கு ஏற்ப உரைநடை நூல்களும் மிகுந்து வருகின்றன. இன்று உரைநடை இலக்கியத்தில் தடம் பதித்து வருபவர்களின் எண்ணிக்கை அதிகம். மு.கருணாநிதி, அ.ச.ஞானசம்பந்தன், இராம. பெரியகருப்பன், ச.வே. சுப்பிரமணியன், திருக்குறள், வீ.முனுசாமி, க.பா. அறவாணன், மா. இராமலிங்கம், ஆகியோரின் பணியைக் குறிப்பிடுவது ஏற்புடையதாகும்.

**1. மு. கருணாநிதி**

அரசியல் வித்தகர். முத்தமிழ் அறிஞர். தமிழ் இலக்கியங்களை அதிகமாக நேசிப்பவர். தமிழக முதல்வர். அரசியல் பணியோடு இலக்கியப்பணி செய்துவரும் தமிழறிஞர். இவரது படைப்புகளில் சமுதாய நோக்கு மேலோங்கி நிற்கும். அறிஞர் அண்ணாவிற்குப் பிறகு அரசியலையும், இலக்கியத்தையும் இரு கண்களாகப் போற்றும் பெருமைக்குரியவர். நாடகத்துறையில் தனி முத்திரை பதித்தவர். பத்துக்கும் மேற்பட்ட நாடகங்கள் எழுதி வரலாறு படைத்தவர்.

Scanned by CamScanner

இவருடைய உரை நடைக்குச் சான்றாக அமைவன குறளோவியமும், நெஞ்சுக்கு நீதியும் ஆகும். கடித இலக்கியத்திலும் இவருடைய பங்களிப்புச் சுட்டத்தக்கது.

2. அ.ச. ஞானசம்பந்தன்

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராகவும், மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றியவர். உலக நாடுகள் பலவற்றிற்கும் சென்று தமிழ் பரப்பியவர். தெ.பொ.மீ. அவர்களின் சீடர். தமிழில் முதன் முதல் இலக்கியக்கலை தந்த சிறப்பிற் குரியவர். கம்பன் மீது அளவற்ற காதல் கொண்டவர். இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும், கம்பன் கலை, அரசியர் மூவர், தம்பியர் இருவர், அகமும் புறமும், மகளிர் வளர்த்த தமிழ், குறள் கண்ட வாழ்வு, தேசிய இலக்கியம், பெரிய புராணம்- ஓர் ஆய்வு போன்றவை இவருடைய தரம்வாய்ந்த படைப்புகள். கம்பன் புதிய பார்வை எனும் நூலுக்குச் சாகித்ய அகாதமி பரிசு பெற்றார். சைவமணி என்ற பட்டம் பெற்று இன்றும் தமிழ்ப்பணி செய்து வரும் நல்லாசானாய் விளங்குகிறார்.

3. இராம. பெரிய கருப்பன்

மதுரை தியாகராசர் கல்லூரியில் பேராசிரியராகவும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர். நாட்டுப்புற இலக்கியத்திலும், ஒப்பிலக்கியத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தாலாட்டு, காதல் வாழ்வு, பிறைதொழும் பெண்கள், ஒப்பிலக்கிய அறிமுகம், சங்க இலக்கிய ஒப்பீடு, சங்க இலக்கியக் கொள்கைகள், குறிஞ்சிப் பாட்டுத் திறனாய்வு, Tradition and talent in sangam poetry, சங்க இலக்கிய மரபுகள், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ஆய்வியல் அறிமுகம், தமிழியல் ஆய்வு போன்ற நூல்களைத் தமிழுக்குத் தந்தவர். சாகித்ய அகாதெமியின் முயற்சியில் சமீபத்தில் வெளிவந்த ஔவையார், தொல்காப்பியர் ஆகிய நூல்களும் இவரெழுதியவையே. தமிழண்ணல் என்ற பெயரோடு இன்றும் இலக்கியப் பணியாற்றி வரும் அறிஞர். வயதையும் பொருட்படுத்தாது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற கருத்தரங்குகளை முன்னின்று நடத்திய பெருமைக்குரியவர்.

4. ச.வே. சுப்பிரமணியன்

கேரளப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும், உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகவும் பணியாற்றியவர்.

Scanned by CamScanner

சிறந்த நூல்களை எழுதியவர். முனைவர் பலரை உருவாக்கியவர். இலக்கணத் தொகை, எழுத்து, சொல் அரிய பனுவல், பல் இலக்கண கூறுகளையும் ஒரு குடை கீழ் கொணரும் பெட்டகமாக விளங்குகிறது. Descriptive Grammar of cilappathikaram with index, இலக்கிய நினைவுகள், காந்தி கண்ட மனிதன், தாயுமானவர், திராவிட மொழி இலக்கியங்கள், தமிழ் இலக்கிய வகையும் வடிவமும் போன்ற நூல்களைப் படைத்தவர். இன்றும் எழுத்துப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறார்.

5. க.ப. அறவாணன்

பாண்டிச்சேரிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பின்னர் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணை வேந்தராகவும் பணியாற்றியவர். ஆங்கிலப்புலமை மிக்கவர். அயல் நாடுகள் பலவற்றிற்குச் சென்று தமிழின் சிறப்பினை உணர்த்தியவர். ஆய்வாளர்கள் பலரை உருவாக்கியவர். Anthropological studies on the Dravido Africans முதலான ஐந்து ஆங்கில நூல்களையும், சைனரின் தமிழிலக்கண நன்கொடை, தமிழரின் தாயகம், வேரும் விழுதும், தமிழ்ச் சமூக நோய்கள் முதலான இருபது தமிழ் நூல்களையும் படைத்த பெருமைக்குரியவர் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றப் பொறுப்பாளர்களுள் முதன்மையானவராக விளங்கியவர்..

6. மா. இராமலிங்கம்

பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். புத்திலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். மிகச் சிறந்த திறனாய்வாளர். கவிதைகள் பலவற்றைத் தந்தவர். திறனாய்வு நெறி, நோக்கு நிலை, புதிய உரைநடை, இருபதாம் நூற்றாண்டு தமிழிலக்கியம் முதலான நூல்களையும், பொய்யான இரவுகள், அதற்கு விலை இல்லை, நாளைக்கும் இதே க்யூவில் முதலான ஐம்பதுக்கும் மேற்பட்ட கதைகளையும் படைத்துள்ளார். புதிய உரைநடை இவருக்குச் சாகித்ய அகாதெமியின் பரிசைப் பெற்றுத்தந்தது. இன்றும் சோர்வின்றி இலக்கியப் பணியாற்றி வருகிறார்.

7. பொற்கோ

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும் பின்னர் துணைவேந்தராகவும் பொறுப்பு வகித்தவர். பொன். கோதண்டராமன் என்பது இவரது பெயர். மொழியியல் அறிஞர். உலக மொழிகள்

Scanned by CamScanner

பலவற்றை அறிந்த பன்மொழியாளர். தமிழ் இலக்கணக் கோட்பாடு, தமிழ்வளர்ச்சி, தமிழ்யாப்பு, நிகழ்ச்சிவழிக் காப்பிய ஆய்வு முதலான இருபது நூல்களையும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் வழங்கியவர்.

## தொகுப்புரை

ஓர் இனத்தின் வளர்ச்சி அதன் மொழியின் வளர்ச்சியில் உள்ளது. மொழியின் பெருக்கம் அதன் உரைநடையில் அடங்கியிருக்கிறது. உரைநடை பல்கிப் பெருகி ஓங்கி உயர்ந்தால்தான், அம்மொழியில் பல்துறைகள் பல்கிப்பெருகவும் இயலும் என்ற வேதநாயகம் பிள்ளை அவர்களின் கருத்திற்கேற்ப தொல்காப்பியத்தில் அடையாளம் காணப்பட்ட தமிழ் உரைநடை இலக்கியம் இன்று இமாலய வெற்றியைப் பெற்றுள்ளது. துறைதோறும் உரைநடை நூல்களும் திறனாய்வு நூல்களும் தோன்றிய வண்ணம் உள்ளன. புதிய உரைநடை எழுத்தாளர் களும் குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றிப் பங்களிப்பு செய்து வருகின்றனர்.

Scanned by CamScanner

# 24

# கவிதை வளம்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் எல்லாத் துறைகளிலும் மாற்றமும் ஏற்றமும் பெற்று விளங்குகின்றது. இக்காலத்தைத் தமிழ் இலக்கியத்தின் பொற்காலமாகப் போற்றுகின்றனர். உரைநடை வளர்ச்சியும், கவிதைப் பெருக்கமும் தமிழ் இலக்கியப் பரப்பை விரிவுபடுத்தியது. இக்காலக் கவிதைக்கு முன்னோடியாக விளங்கியவர் இராமலிங்க அடிகளார். கவிதை உலகில் புரட்சியையும் புதுமையையும் புகுத்தியவர் பாரதி. பாரதிக்குப் பின் பலர் கவிதைகளைப் படைத்தளித்தனர். அவர்களுடைய பங்களிப்பைச் சுருக்கமாகக் காண்பது அவசியமாகும். பாரதிதாசன், கவிமணி, நாமக்கல் கவிஞர், சுத்தானந்த பாரதி, ச.து.சுப்பிரமணிய யோகி, கம்பதாசன், மீ.ப.சோமு, முடியரசன், வாணிதாசன், கா.மு.செரீப், கண்ணதாசன், சுரதா, பொன்னடியான், கலைஞர், அழ.வள்ளியப்பா. பெ.தூரன், பூவண்ணன் ஆகியோரின் கவிதை இலக்கியப்பணி சுட்டப்பெறுகின்றது.

## 1. பாரதியார் (1882-1921)

இயற்பெயர் சுப்பிரமணியன். பெற்றோர் சின்னசாமி, இலக்குமி அம்மையார். பள்ளிப் படிப்பில் ஈடுபாடு கொள்ளாத இவர் காசி சென்று வடமொழி, இந்தி கற்றார். எட்டயபுரத்து அரசவைக் கவிஞராக விளங்கினார். சிறந்த தமிழாசிரியராய்த் திகழ்ந்தவர். இள வயதில் கவிதை எழுதும் ஆற்றல் பெற்றுப் பாடல் பல புனைந்தார். ஆங்கிலக் கவிஞர் ஷெல்லியிடம் மிகுந்த ஈடுபாடு உடையவர். ஷெல்லிதாசன், சக்தி தாசன், காளிதாசன் எனப் பல புனைபெயர்கள் கொண்டவர். சுதேசமித்திரன் இதழில் உதவி ஆசிரியராக இருந்தார். சக்கரவர்த்தினி, இந்தியா ஆகிய இதழ்களை நடத்தியவர். தேசியத்தையும், தமிழ்ப் பற்றையும் தம் உயிர்மூச்சாகக் கொண்டவர் பாரதியார்.

**'என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்**
**என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்'**

என்று பாடித் தேசிய உணர்வைத் தூண்டியவர்.

Scanned by CamScanner

**செந்தமிழ் நாடெனும் போதினிலே-இன்பத்**
**தேன் வந்து பாயுது காதினிலே**

எனத் தமிழ்நாட்டின் பெருமை பேசியவர். 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே', 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்று தமிழின் இனிமையையும் சிறப்பையும் எடுத்துரைத்தவர்.

இந்தியச் சமூகத்தில் காணப்படும் சாதி முறையைக் கண்டித்தவர் களில் பாரதியார் முதன்மையானவர் எனலாம்.

**'ஏழை என்றும் அடிமை என்றும்**
**எவருமில்லை ஜாதியில்**
**இழிவு கொண்ட மனித ரென்பார்**
**இந்தியாவில் இல்லையே'**

என்று பாடி சாதி வேற்றுமை இயற்கையானது என்பதை எடுத்துரைத் தார். பொதுவுடைமைச் சிந்தையிலும் இவரே முன்நிற்பவர் என்று கூறலாம். 'தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற முழக்கம் அக்கருத்தை வெளிக்காட்டுகிறது.

கனகலிங்கம் என்ற ஆதிதிராவிடர்க்குப் பூணூல் அணிவித்துப் புரட்சி செய்த பெருமைக்குரியவர். இவர் பாடிய பாப்பாப் பாட்டு அனைவர் மனத்தையும் கொள்ளை கொள்வது.

**பாதகம் செய்பவரைக் கண்டால் - நாம்**
**பயங்கொள்ள லாகாது பாப்பா**
**மோதி மிதித்துவிடு பாப்பா**
**அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா**

என்று பிள்ளை உள்ளத்திலும் பெரு வீரத்தைப் பதியச் செய்தவர். பாரதியார் படைத்த குயில் பாட்டு, காதலின் பெருமையை,

**காதல் காதல் காதல்**
**காதல் போயின்**
**சாதல் சாதல் சாதல்**

என்று உரைக்கிறது.

பாரதியார் பாடிய விநாயகர் நான்மணிமாலை, தோத்திரப் பாடல்கள், வேதாந்தப்பாடல்கள் இவற்றைப் பக்திப்பாடல்களில் அடக்கலாம். தேசபக்திப் பாடல்களாக அவர் பாடியவை பலவாகும். பாரத நாடு என்ற தலைப்பில் 19 பாடல்களையும் தமிழ்நாடு, மொழி

Scanned by CamScanner

என்ற தலைப்பில் 6 பாடல்களையும் சுதந்திரம் பற்றி 6 பாடல்களையும் பாடியுள்ளார். தேசியத் தலைவர்கள் பற்றி இவர் பாடிய பாடல்கள் ஒன்பதாகும் பிற நாடுகள் என்ற தலைப்பில் அடங்குவன 4 பாடல்கள்.

பாரதியார் பாடிய சுயசரிதை, பாரதி அறுபத்தாறு, புதிய ஆத்திசூடி, முரசு, பாப்பாப் பாட்டு, வாழ்த்துப் பாக்கள் சிறப்புடையவை. குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலியன காவியங்களாய்த் திகழும் தன்மையன. இவர் தனிப்பாடல்களாய்ப் பாடியவை ஏராளம். அவற்றைப் பல்வகைப் பாடல்கள், சமூகம், வசன கவிதை என்ற பிரிவுகளில் அடக்கலாம்.

பாரதியார் கவிதை இலக்கியம் மட்டுமின்றிச் சந்திரிகையின் கதை, நவதந்திரக் கதைகள் புனைந்துள்ளார். ஞான ர்தம் தத்துவக் கருத்து பொதிந்தது. கலைகள், மாதர் போன்ற கட்டுரை நூல்களும் இவரால் எழுதப்பட்டவை. பல கவிதைகளையும் கீதையையும் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

பன்முகப் படைப்பாற்றலை உடைய இவரைக் கவிமணி 'பாட்டுக் கொரு புலவன் பாரதியடா' என்கிறார். தமிழறிஞர் வையாபுரிப்பிள்ளை இவ்வளவு சிறந்த கவிஞர் தமிழுலகில் சில நூற்றாண்டுகளாகத் தோன்றியதில்லை என்கிறார்.

பாரதி பரம்பரை என்ற ஒரு புதுக்கவிஞர் இனம் உருவாக வித்திட்டவர் பாரதி. பழைய மரபுகளை உடைத்துப் புதிய நெறியை அனைத்து வகையிலும் காட்டி மக்களுக்குப் புரியக்கூடிய முறையில் கவிதை எழுதி இலக்கியத்தைப் பொதுமைப்படுத்தியவர் பாரதியார் என்றால் அது மிகையாகாது.

## 2. பாரதிதாசன் (1891-1964)

புதுவையில் பிறந்து புது இலக்கிய நெறி கண்டவர். இயற்பெயர் சுப்புரத்தினம். காரைக்காலைச் சார்ந்த நிரவியில் ஆசிரியர் பணி ஏற்றார். சிறு வயது முதல் சிறு சிறு பாடல்கள் எழுதி வந்தார். பாரதியின் அறிமுகம் கிடைத்தபோது அவர் பாடு என்று சொல்லியவுடன்.

**எங்கெங்கு காணினும் சக்தியடா- தம்பி**
**ஏழுகடல் அவள் வண்ணமடா.**

என்று பாடத் தொடங்கினார். இதுவே அவரைப் பாரதிதாசனாகத் தமிழ் நாட்டுக்கு அறிமுகப்படுத்தியது. தொடக்க காலத்தில் கடவுளரிடம் நம்பிக்கை கொண்டவராகத் திகழ்ந்தார். பின் நாத்திகராக மாறினார்.

Scanned by CamScanner

சாதிப்பூசல், சமய பேதம், பெண்ணடிமை ஆகியவற்றைச் சாடியவர். எதிலும் புரட்சிப் புது நோக்குக் கண்டவர். புதுக் கொள்கைகளைக் கொண்டவராதலால் இவர் புரட்சிக்கவி என்றே அழைக்கப்பட்டார். தமிழ்ச் சமுதாயத்தில் இருந்து வந்த பெண்ணடிமைத் தனத்தைக் கண்டித்தவர்; விதவை மறுமணத்தை ஆதரித்தவர்.

"வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ
பாடாத தேனீக்கள் உலாவத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ"

என அவர் கேட்ட வினா சமுதாயத்தைச் சிந்திக்க வைத்தது.

பெண்கல்வியின் இன்றியமையாமையையும் இவர் வலியுறுத்து கின்றார்.

"கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம்; அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை.
கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி; அங்கே
நல்லறி வுடையமக்கள் விளைவது நவிலவோ நான்"

பாரதிதாசன் இயற்கையழகில் இதயம் பறி கொடுத்த கவிஞர் இயற்கை பற்றி அவர் பாடிய கவிதைகள் இலக்கிய நயம் உடையவை. காதற் சித்திரங்களைப் படைப்பதிலும் வல்லவர். இவர் இயற்றிய குடும்பவிளக்கு இல்வாழ்க்கையின் நல்லதோர் காவியம்.

தமிழ்நாடு, தமிழ் இனம், தமிழ்மொழி பற்றிய இவர் பாடல்கள் தனித்தன்மை உடையவை.

"சாம்போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் – என்றன்
சாம்பலிலும் தமிழ் மணந்து வேக வேண்டும்"

என்பது மொழிப்பற்றை விளக்குவது 'தமிழுக்கு அமுதென்று பேர் இன்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்' என்ற தொடர்கள் மறக்க இயலாதவை. 'தமிழைப் பழித்தவனை தாய் தடுத்தாலும் விடாதே' என்பது அவரின் அறிவுரை. 'ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பர் ஆகிவிட்டால் ஓர் நொடிக்குள் ஓடப்பர், உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்ராய் விடுவார் உணரப்பா நீ' என்ற அவர் கூற்றுப் பொதுவுடைமைக்கு வழி கூறுவது.

பாரதிதாசன் தன் உணர்ச்சி வேகத்தில் பாடிய கவிதைகள் பல. அவற்றை நான்கு தொகுதிகளாகக் கொள்ளலாம். முதல் தொகுதியில் 75 தலைப்புகளில் கவிதைகள் அமைந்துள்ளன. சஞ்சீவி பர்வதத்தின்

Scanned by CamScanner

சாரல், புரட்சிக்கவி, வீரத்தாய் முதலிய காப்பியங்கள் குறிப்பிடத் தக்கவை. இரண்டாம் தொகுதியில் 68 தலைப்புகளில் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. திராவிட நாட்டுப் பண், போர் மறவன், ஒன்பது சுவை, காதல் வாழ்வு ஆகிய சிறு காப்பியங்கள், உள்பட 23 தலைப்புகளில் கவிதைகள் மூன்றாம் தொகுதியில் அமைவன.

நான்காம் தொகுதியில் 68 தலைப்புகளில் காதல் கவிதைகளும் 55 தலைப்புகளில் நாடு பற்றிய கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. இவையன்றி இவர் பாடிய கவிதைகள் மிகுதியாகும். பாரதிதாசன் ஓர் இலக்கியக் கவிஞனாக ஏற்றமிகு சமுதாயச் சிந்தனைவாதியாக பகுத்தறிவு பேசும் பகலவனாக விளங்கியதை அவரின் கவிதைகள் உணர்த்துகின்றன

**3. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை (1876-1954)**

நாகர்கோயிலை அடுத்து தேரூர் இவர் பிறந்த ஊர். பள்ளிகளில் தமிழ் ஆசிரியர் பணி செய்தவர். தமிழறிஞர் டி.கே.சி. 'இவர் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருஞ்செல்வம். அரிய செல்வம், தெவிட்டாத அமிர்தம்' என்று பாராட்டுகின்றார். இவர் பாடிய 'மலரும் மாலையும்' என்ற கவிதை நூல் மிகச் சிறப்புடையது. எட்வின் ஆர்னால்டு எழுதிய Light of Asia என்பதன் தமிழாக்கமே ஆசிய ஜோதியாகும். உமர்கயாம் பாரசீக மொழியில் பாடியதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் பிட்ஜெரால்டு. அம்மொழி பெயர்ப்பைத் தழுவிக் கவிமணி 'உமர்கயாம் பாடல்கள்' பாடியுள்ளார். கவிதை இலக்கிய மொழி பெயர்ப்பு வகையில் இது முதன்மையானது. இவர் இயற்றிய மருமக்கள் வழி மான்மியம் நகைச்சுவை ததும்பும் இலக்கியமாகும். தேவியின் கீர்த்தனங்கள், காந்தளூர்ச்சாலை, கவிமணியின் உரைமணிகள் ஆகியவை இவருடைய படைப்புகள்.

**4. நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை**

சேலத்தை அடுத்த நாமக்கல் இவர் பிறந்த ஊர். இதனால் இவரை நாமக்கல் கவிஞர் என்பர். தமிழக அரசவைக் கவிஞராக விளங்கியவர். காந்தியக் கவிஞர் என்ற பட்டம் பெற்றவர்.

**'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது**
**சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்'**

என்ற பாடல் இவரைக் காந்தியவாதியாக அடையாளம் காட்டியது.

**'தமிழன் என்றொரு இனமுண்டு**
**தனியே அவர்க்கொரு குணமுண்டு'**

Scanned by CamScanner

என்று தமிழினத்தின் சிறப்பை விளக்கியவர் 'அவளும் அவனும்' காவியம் இவர்க்குப் புகழைத்தேடித் தந்தது. இவர் கவிதைகளில் தேசிய சிந்தனையே மேலோங்கி நிற்கிறது.

நாமக்கல் கவிஞர் படைத்த 'மலைக்கள்ளன்' புதினம் குறிப்பிடத்த தகுந்த ஒன்று. இலக்கிய இன்பம், தமிழன் இதயம், என்கதை, சங்கொலி, கவிதாஞ்சலி, பிரார்த்தனை, தாயார் கொடுத்த தனம், தேமதுரத் தமிழோசை முதலானவை இவர் படைத்தவை.

5. புலவர் குழந்தை

ஈரோட்டிற்கு அருகில் உள்ள ஓலவலசு என்ற ஊரில் பிறந்தவர். புரட்சிகரமான சிந்தனையுடையவர். பெரியாரின் தலைசிறந்த தொண்டர் களில் ஒருவராகத் திகழ்ந்தவர். முப்பது நூல்களைப் படைத்தளித் துள்ளார். அவற்றுள் இராவண காவியம், நெருஞ்சிப் பழம், காமஞ்சரி, திருக்குறள்-குழந்தை உரை, குழந்தை உலா, தொல்காப்பியர் காலத் தமிழர், திருக்குறளும் பரிமேலழகரும், கொங்கு நாடு, தீரன் சின்னமலை, சங்கத் தமிழ்ச்செல்வம் முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்கன.

இலக்கிய உலகில் பெரிதும் பேசப்பட்ட, விமர்சனத்திற்குட்பட்ட நூல் இராவண காவியமாகும். இராமாயணத்திற்கு நேர் எதிராக இராவணனைப் புகழ்ந்து அவனுக்கு ஏற்றம் தரும் வகையில் அமைந்தது. அரசால் தடைசெய்யப்பட்ட இந்நூல் இருபத்து மூன்று ஆண்டு களுக்குப் பின் தடைநீக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. 'ஸோரபும் ருஸ்துவும்' என்ற மேலை நாட்டு நூலைத்தழுவி எழுதிய 'காமஞ்சரி' எனும் செய்யுள் நாடகத்தில் மொழிப்பற்றையும், நாட்டுப்பற்றையும் காணலாம்.

**வள்ளுவர் செய் திருக்குறளால்**
**வாழ்வியலின் திறம் அனைத்தும்**
**உள்ளுறையாக் கொண்டுலகம்**
**ஒருநிகரா உயர்ந்தனையே**
**இளங்கோவின் செஞ்சிலம்பை**
**இனி தணிந்து தமிழுலகின்**
**வளங்காணக் கலகல என**
**மகிழ்ந்துலவி வந்தனையே**

என்பன தமிழின் சிறப்பை உணர்த்துவன.

Scanned by CamScanner

6. சுத்தானந்த பாரதியார்

சிவகங்கையில் பிறந்தவர். இவர் பாடிய பாரத சக்தி மகா காவியம் பெருங்காப்பியப் பண்பு கொண்டது. அருட்செல்வம் கவி கனவுகள், புதுயுகப் பாட்டு, கீர்த்தனாஞ்சலி, பாரத கீதம், வளையாபதி அகவல் எனப் பல நூல்களைப் படைத்தவர். ஆன்மீகச் சிந்தனையைக் கவிதை யாக்கி இலக்கிய இன்பம் பயக்க இவர் படைத்தவை பலராலும் அறியப் படாதவையாய் உள்ளன.

7. ச.து.சுப்பிரமணிய யோகி

பாலபாரதி என்று அழைக்கப்பட்டவர். தமிழ்க்குமரி என்ற நூலின் மூலம் தமிழ்நாட்டுக்கு அறிமுகமானவர். இவர் எழுதிய அகல்யா, மேரி மக்தலேனா இரண்டும் பெண்மை போற்றும் இலக்கியங்கள்.

பைபிளிலுள்ள மேரி மக்தலேனா வரலாற்றைப் பாடிய கவிஞர் மேரி மக்தலேனாவை,

**"வான் கோழிகள் இடையே ஒரு**
**மயிலாடுதல் போலும்**
**மீன் பாடிய வானத்தொளி**
**மேவும்மதி போலும்**
**தேன்பாடிய மலரிடை**
**செந்தாமரை போலும்**
**மான்பாடிய விழியாரிடை**
**மரியாள் எனும் ஒருமான்.**

என்று அறிமுகப்படுத்துவது கவிஞரின் கவிநயத்தை அறிந்து கொள்ளுவதற்குப் போதிய சான்றாகும்.

8. கம்பதாசன்

இயற்பெயர் இராஜப்பா. முதல் முத்தம், அருணோதயம், புத்தன் புனர் ஜன்மம், பாட்டு முடியுமுன்னே, தொழிலாளி, புதியபாதை, கம்பதாசன் கவிதைகள் முதலியவை இவருடைய படைப்புகள்.

9. மீ.ப.சோமு

மிகச் சிறந்த கவிஞர்களில் ஒருவர். சொல் திறமும் இலக்கியச் சுவையும் கொண்ட இளவேனில் இவரது கவிதைப் படைப்பாகும்.

Scanned by CamScanner

10. முடியரசன்

இயற்பெயர் துரைராசு, மதுரை மாவட்டம் பெரியகுளத்தைச் சார்ந்தவர். தமிழாசிரியராய்ப் பணியாற்றியவர். முடியரசன் கவிதைகள், காவியப் பாவை, கவியரங்கில் முடியரசன், பாடுங்குயில், நெஞ்சு பொறுக்குதில்லையே, மனிதரைத் தேடுகிறேன் முதலியவை இவருடைய கவிதைத் தொகுப்புக்கள். பூங்கொடி, வீரகாவியம், ஊன்று கோல், முதலியவை இவருடைய காவியங்கள். அண்மையில் மறைந்த கவிஞர் 'எனது மூத்த வழித்தோன்றல்' எனப் பாவேந்தரால் பாராட்டப் பெற்றவர்.

பெரியாரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர். தமிழைத் தெய்வமாகவும், தாயாகவும், தந்தையாகவும், காதலியாகவும், மகனாகவும் நினைத்துப்பாடிய பாடல்கள் சிறப்பானவையாகும்.

"நீள் மொழி என் செவி சேருகையில் -நெஞ்சில்
நேரும் மகிழ்வினை யாதுரைப்பேன்?
என்னுயிர் மூச்சென ஆனவனே- எனக்கு
எதுக்கடா அந்த மேலுலகம்"

என்ற பாடல் தமிழைத் தன் மகனாகக் கருதிப் பாடியதாகும்.

11. வாணிதாசன்

இயற்பெயர் எத்திராஜ். பொதுவுடைமை நோக்கும் சீர்திருத்தச் சிந்தனையும் கொண்டவர். தமிழச்சி, தொடுவானம், எழிலோவியம், கொடி முல்லை, சிரித்த நுணா, இரவு வரவில்லை, பாட்டு பிறக்குமடா முதலான நூல்களைப் படைத்துள்ளார்.

பிறப்பால் ஏற்றத்தாழ்வு பேசுவோரைக் கடுமையாகச் சாடுகிறார். வறுமையும் செல்வமும் பிறப்பால் அமைவதில்லை. அவரவர் உழைப்பின்மையாலும் உழைப்பாலும் அமைபவை என்பது கவிஞரின் கருத்து.

'பிறப்பினிலே தாழ்ந்த உயிர் உயர்ந்த உயிர் இல்லை
பின் வந்த சரக்கிதுவாம்; அறிவற்று ஏற்றோம்!
பிறப்பினிலே வறுமை வந்தே உடன் தொடர்ந்ததில்லை
பின்வந்த சரக்கிதுவாம் திருடர்களின் செய்கை!
பிறப்பினிலே உயிரினங்கள் யாவையுமே ஒன்றாம்!
பேச்சில்லை வறுமைக்கே கொடுவாளைத் தூக்கே!'

என்ற கவிதையில் வள்ளுவரின் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற குறள் கருத்தும் 'கொலை வாளினை எடடா' என்ற புரட்சிக்கவிஞரின் கருத்தும் மிளிர்வதைக் காணலாம்.

Scanned by CamScanner

12. கா.மு. செரீப்

தஞ்சை மாவட்டம் அபிவிருத்தீசுவரத்தில் பிறந்தவர். தினமும் காலையில் பசியாறுவதற்கு முன் ஒரு கவிதையாவது இயற்றும் பழக்கமுடையவர். அரசியல் இயக்கங்களில் இணைத்துக் கொண்டு தொண்டாற்றியவர். ஒளி, இன்றைய சமுதாயம், அமுதக்கலசம், கலைஞர் 63, கா.மு. செரீப் கவிதைகள் என்பன இவர் இயற்றிய கவிதைகளின் தொகுப்பு நூல்களாகும். இவையன்றி மச்சகந்தி என்ற குறுங்காவியத்தையும் எழுதியுள்ளார்.

13. பெருஞ்சித்திரனார்

தனித்தமிழ்நாடு எனும் கொள்கை உடையவர். மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரின் கொள்கைகளைப் பரப்பியவர்களில் முதன்மையானவர். தனித்தமிழ் இயக்கத் தொண்டராகவும் தமிழ்ச்சிட்டு, தென்மொழி ஆகிய இதழ்களின் ஆசிரியராகவும் விளங்கியவர். 'பாவலரேறு' என்ற பட்டம் பெற்ற இவர் ஐயை, பாவியக்கொத்து, கொய்யாக்கனி, எண்சுவை என்பது முதலான போன்ற படைப்புகளைத் தந்தவர்.

14. கண்ணதாசன்

செட்டி நாட்டுச் சிறுகூடல் பட்டியில் பிறந்தவர். இளமைக் காலப் பெயர்கள் முத்தையா, நாராயணன். எட்டாம் வகுப்பு வரை, படித்த இவரின் புனைபெயர்கள், காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதி நாதன், தமிழ் மன்னன், துப்பாக்கி, ஆடிய பாதம் என்பன. அரசியல் இயக்கங்கள் பலவற்றில் இருந்து மனநிறைவு பெறாமல் ஆன்மீகத்தை நாடியவர். இவருடைய கவிதைகள் கண்ணதாசன் கவிதைகள் என்ற தலைப்பில் ஏழு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவர் படைத்த குறுங்காவியங்கள் மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி. இவருடைய இயேசு காவியமும், அர்த்தமுள்ள இந்துமதமும் ஆன்மீகச் சிந்தனையின் வெளிப்பாட்டுக்குச் சான்றாக அமைகின்றன.

இவருடைய திரையிசைப் பாடல்கள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. சிறந்த நாவலாசிரியர், சிறுகதையாசிரியர் எனப் பன்முக இலக்கியப் படைப்பாளியாகத் திகழ்ந்தவர். தமிழக அரசவைக் கவிஞராகவும் இருந்தவர். சேரமான் காதலி எனும் புதினத்திற்குச் சாகித்ய அகாதெமி பரிசைப் பெற்றவர்.

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். இந்த நாடு வறுமையின் பிடியிலிருந்து விடுபட வேண்டும். இல்லாமையும்

Scanned by CamScanner

அறியாமையும் நீங்கினால் ஒழிய பெற்ற சுதந்திரத்தால் பயன் ஏதுமில்லை என்பதை-

"எல்லோர்க்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும்
இல்லையெனில் இந்நாடு அழிய வேண்டும்
வல்லவனை வாழ்விக்க வந்தோ மில்லை
வளமான சுதந்திரத்தை தந்தோ மில்லை"

என்ற கவிதை வரிகளின் மூலம் அறியலாம். மக்கட் செல்வதின் மாண்பினைக் குழந்தைச் செல்வத்தின் சிறப்பினைப் புலவர் பலர் பாடி யுள்ளனர். ஆயினும் கவிஞர் கண்ணதாசனின்,

"மழைகூட ஒரு நாளில் தேனாகலாம்
மணல் கூட ஒரு நாளில் பொன்னாகலாம்
ஆனாலும் அவை யாவும் நீயாகுமா
அம்மா என்றழைக்கின்ற சேயாகுமா?"

என்ற பாடல் தனித்துவுமானது. எதார்த்த வாழ்வைக் கவிதையாக்கு வதிலும் தத்துவக் கருத்துக்களை எளிமையாக்கித் தருவதிலும் கண்ணதாசனுக்கு நிகர் எவரும் இல்லை எனலாம். 'தென்றல்' எனும் பெயரில் இலக்கிய இதழை நடத்திய சிறப்பிற்குரியவர்.

15. சுரதா

இயற்பெயர் இராசகோபால். இலக்கியச் சுவை மிக்க கவிதை களைப் பாடுவதில் வல்லவர். உவமைகளைக் கையாண்டு உணர்த்த வந்த பொருளின் கருத்தை மனத்தில் நிலைபெறச் செய்வதில் சிறந்த கவிஞர். அதனால்தான் இவரை உவமைக் கவிஞர் என்பர். பாரதிதாசன் மேல் கொண்ட பற்றால் சுப்புரத்தின தாசனாகி, 'சுரதா' என்ற பெயர்கொண்டார். தேன் மழை, அவை அடக்கம் முதலியவை இவருடைய கவிதைத் தொகுதிகள். வியக்கும்படியான செய்திகளைச் சுவைபடக் கூறுவது சுரதாவின் திறன். சாவின் முத்தம், உதட்டில் உதடு, பட்டத்தரசி, துறை முகம், வார்த்தை வாசல் முதலானவை இவருடைய படைப்புகளாகும்.

சுரதா பல நூல்களைப் படைத்திருந்த போதிலும் அவரை மிகச் சிறந்த கவிஞராக அடையாளப்படுத்திக் காட்டுவது. 'தேன்மழை' கவிதைத் தொகுதியாகும். பகுத்தறிவுப் பாசறையைச் சார்ந்த சுரதாவுக் கும் சகுனம் பார்ப்பதில் நம்பிக்கை இல்லை. பல்லி சொல்வதையும் நம்புவதில்லை. அது வீழ்வதைப் பற்றியும் நம்புவதில்லை பல்லியைப் பற்றிச் சுரதா பாடும்,

Scanned by CamScanner

"தலையில் நீ வந்து வீழ்ந்தால்
சண்டையாம், தோளில் வீழ்ந்தால்
நலம்பல பெருகும் என்பர்
நான் இதை நம்பவில்லை
இலர் பலர் இந்த நாட்டில்
எண்ணற்றோர் எனவே அன்னார்
வலப்புறத்தோளில் வீழ்ந்தே
வாழச்செய் எங்கே பார்ப்போம்"

என்ற பாடல் நகைச்சுவை உணர்வைத் தந்தாலும் ஏழையர்மீது கவிஞர் கொண்டுள்ள அக்கறையின் வெளிப்பாடாகவும் அமைந்துள்ளது.

16. பொன்னடியான்

இயற்பெயர் ஜோசப் ராஜமாணிக்கம் பாவேந்தரின் சீடர்களுள் ஒருவர். முல்லைச்சரம் எனும் கவிதை இதழ் மூலம் புதிய கவிஞர் பலரை உருவாக்கியவர். மனிதகுல மாண்புகளையும், உரிமைகளையும், முரண்பாடற்ற சமுதாய அமைப்பையும் விரும்பிப் பாடிய நல்ல கவிஞர். பெருங்கவிஞர். புரட்சிக் குயில் போன்ற பட்டங்களைப் பெற்றவர். பனிமலர், ஓர் இதயத்தின் ஏக்கம், ஒரு கைதியின் பாடல், பொன்னடியான் கவிதைகள், நெஞ்சில் நிலைத்த நினைவுகள், புன்னகைப் பூக்கள் முதலியன இவருடைய படைப்புகள். 'தென்றலின் சுகமும் புயலின் வேகமும்' இவருடைய கவிதைகளில் விரவிக் கிடக்கும்.

"உலகமென்னும் சிறையினிலே உலவுகின்ற பைத்தியங்கள் நாம்;
விலங்கிடாத கைதிகள் நாம் விளங்கிடாத கைதிகள் நாம்"

என்பன போன்ற கவிதைகள் சிந்தனைக்குரியவை.

17. கலைஞர் கருணாநிதி

உரைநடை, கவிதை, நாடகம், ஆகிய மூன்று களங்களிலும் முத்திரை பதித்தவர். கதிரொளிக் கவிஞராகத் திகழ்பவர். கற்பனை, கருத்தாழம், எளிமை, இனிமை, உணர்ச்சிப் பெருக்கு, வருணனை, உவமைவளம் ஆகிய பண்புகளை உள்ளடக்கியன இவருடைய கவிதைகள்.

"ஆள்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார்
ஆணையிடுகின்றார் எம் அண்ணா என்றிருந்தோம்
அய்யகோ! இன்னும்
ஓராண்டே வாழப்போகிறேன் என்று அவர்
ஓர் விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது"

Scanned by CamScanner

'இதயத்தைத் தந்திடு அண்ணா' எனும் பகுதியில் இடம்பெறும் கவிதை இது. தமிழகத்தின் முதலமைச்சராய் இருந்து இன்றும் கவிதைகள் தந்து கொண்டிருக்கும் மகத்தான கவிஞர்.

### 18. அழ.வள்ளியப்பா

குழந்தைகளின் உள்ளங்களைக் பிணித்துப் பண்புறச் செய்யும் கவிதைகளை இயற்றிய பண்பாளர். இனிய குழந்தைக் கவிஞர். குழந்தை இல்க்கியத்தின் முன்னோடியாகவும். முடிசூடாமன்னராகவும் திகழ்பவர். மலரும் உள்ளம், பாட்டிலே காந்தி, பாப்பாவுக்குப் பாட்டு, நல்ல நண்பர்கள், பெரியோர்கள் வாழ்விலே, சின்னஞ்சிறுவயதில், பிள்ளைப் பருவத்திலே போன்ற நூல்கள் மத்திய, மாநில அரசுகளின் பரிசுகளைப் பெற்றவை. அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்த வர். குழந்தை எழுத்தாளர் சங்கத்தை நிறுவிய பெருமைக்குரியவர். பிள்ளைக் கவியரசு. மழலைக் கவிச்செம்மல் போன்ற பட்டங்களைப் பெற்றவர். குழந்தைக் கவிஞராக மட்டுமின்றி பர்மா ரமணி, மணிக்கு மணி போன்ற கதைகளை எழுதி நாவலாசிரியராகவும் விளங்குகின்றார்.

### 19. பெ.தூரன்

பெரியசாமி என்ற பெயருடைய இவர் குழந்தை இலக்கியப் பணியில் குறிப்பிடத்தகுந்த மற்றொருவர். சூரப்புலி, மாயக்கள்ளன், ஆனையும் பூனையும், பறக்கும் மனிதன், ஓலைக்கிளி, தம்பியின் திறமை, நாட்டிய ராணி, மஞ்சள் முட்டை, கொல்லிமலைக்குள்ளன், கடக்கிட்டி முடக்கிட்டி எனப் பல நூல்கள் சிறுவர் இலக்கியத்துறைக்கு இவர் தந்தவை. குழந்தைக் களஞ்சியம் இவருடைய சிறப்புப் படைப்பு.

### 20. பூவண்ணன்

இயற்பெயர் வே.தா.கோபாலகிருஷ்ணன். குழந்தை இலக்கியத்தில் இன்றும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருபவர். காவேரியின் அன்பு, புலவர் மகன், பாட்டுத் தோட்டம், புள்ளிமான், பொம்மை வண்டி, பல்லவமன்னன், ராஜாமணி, உண்மைக்கு வெற்றி, அன்புநிலையம் போன்ற எழுபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்தவர். இவருடைய குழந்தை இலக்கிய வரலாறு குறிப்பிடத் தகுந்த ஒன்று.

### இன்னும் பலர்

தமிழ்க்கவிதைக்கு வளம் சேர்த்தவர்களின் பட்டியல் அதிகம், ஒரு சிலர் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். நாரணதுரைக்கண்ணன்,

Scanned by CamScanner

தஞ்சை வாணன், தே.ப.பெருமாள், சௌந்திரா கைலாசம், தமிழ்ஒளி, பாவலர் பாலசுந்தரம், குலோத்துங்கன், சாலைஇளந்திரையன், முருகு. சுந்தரம், காவிரி நாடன், தமிழ்ப்பித்தன், புலமைப்பித்தன், மு.உலகநாதன், பொற்கோ போன்றோரும் தமிழ்க் கவிதை இலக்கியத்திற்கு வளம் சேர்த்த பெருமைக்குரியவர்களாக விளங்குகின்றனர்.

## திரைப்படப்பாடல்கள் தந்த கவிஞர்கள்

### 21. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

பொதுவுடைமைத் தத்துவத்தில் தன்னை வயப்படுத்திக் கொண்ட மக்கள் கவிஞன், கருத்து வளம், கவிதை நலம், சிந்தனைச் செறிவு, சமத்துவ நெறி ஆகியவை இவருடைய கவிதைகளில் உயிர் பெற்று விளங்கும். நாட்டுப்புறப்பாடல் அமைப்பில் கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்ற ஆர்வம் மிக்கவர். மக்கள் எழுச்சியும், சமுதாய முன்னேற்றமும் இவருக்கு இரு கண்கள். முப்பது வயதுக்குள்ளாகவே காலனால் பறிக்கப்பட்ட உத்தமக் கவிஞர். உண்மைக் கவிஞர். திரையிசைப் பாடல்களில் சமுதாய நோக்கை ஏற்றி வைத்துப்பாடிய கவிஞர்களுள் தலைமகன்.

**"மாடா ஒழைச்சவன் வாழ்க்கையிலே பசி**
**வந்திடக் காரணம் என்ன மச்சான்?**
**தேடிய செல்வங்கள் வேறே இடத்திலே**
**சேர்வதினால் வரும் தொல்லையடி..."**

போன்ற தரமான திரையிசைப் பாடல்களைத் தந்து இன்றும் மக்கள் மனத்தில் பட்டுக்கோட்டையாக இல்லை பாட்டுக்கோட்டையாக வாழ்ந்து கொண்டிருப்பவர். இவருடைய கவிதைகளை நியுசெஞ்சரி புத்தக நிலையம் தொகுத்து வெளியிட்டிருக்கிறது.

### 22. உடுமலை நாராயணகவி

தமிழ்த் திரைப்படப் பாடல் ஆசிரியர்களில் சந்தங்களையும் சீர் திருத்தக் கருத்துக்களையும் எழுதிப் பல பாடல்களில் வெற்றி பெற்றவர் இவர் ஒருவரே. திரைப்பட உலகில் முதன் முதலில் வாத்தியார் என்று அழைக்கப்பட்டவர்.

திரை உலகத்தில் தன் தனித்துவத்தால் பல காலம் நிலைபெற்ற கவிஞர் இவர். சிறந்த திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதியவர். உதாரணமாக அமைவது கலைவாணர் நடித்த 'நல்லதம்பி'யாகும்.

Scanned by CamScanner

### 23. தஞ்சை இராமையாதாஸ்

கதை அமைப்புகளையும் சமூக நிகழ்ச்சிகளையும் தொடர்பு படுத்தித் திரைப்படப்பாடல் எழுதுவதில் வல்லவர். சந்தநயமும் சொற் சிறப்பும் கொண்டு திகழ்வன இவருடைய பாடல்கள்.

ஒரு ஜாண் வயிறே இல்லாட்டா
இந்த உலகில் ஏது கலாட்டா

என்பன போன்ற பாடல்கள் மனத்தில் பதிபவை.

### 24. மருதகாசி

விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் அனைவர் கருத்தையும் கவரும் வகையில் பாடல் எழுதும் ஆற்றல் உடையவர். மருதகாசி 3000 திரைப்படப் பாட்ல்களை எழுதியவர். அவற்றுள் சில நூல்வடிவம் பெற்றன. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பாடல்கள் பலவற்றை எழுதியவர். 'ஏர்முனைக்கு நேர் இங்கு எதுவுமே இல்லை' என்று பாடலை எழுதியவர்.

இடைக்காலத்தில் வெளிவந்த திரைப்படங்களில் இடம் பெற்ற பாடல்கள் இன்றும் இலக்கியத்தரம் உடையனவாகத் திகழ்கின்றன.

கா.மு.செரிப்- வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும்

மு.கருணாநிதி- எதையும் தாங்கும் இதயம் வேண்டும்

மாயவநாதன் - பெண்ணே உன் கதை இதுதானா?

குடந்தை கிருஷ்ணமூர்த்தி - சந்தனப் பொதிகையில் தென்றல் என்னும் பெண்ணாள்.

கு.மா.பாலசுப்பிரமணியன்- பாவத்தை செய்தவன் யாரோ

### தொகுப்புரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் உரைநடைக்கு அடுத்துக் கவிதை இலக்கியம் மிகுந்த செல்வாக்கைப் பெற்றுத் திகழ்கிறது.. இன்றும் தரமான கவிதைகளும், கவிதைத் தொகுப்புகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. திரைப்படங்களுக்குப் பாடல்களைத் தந்து மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்ற கவிஞர்களின் பணி என்றும் நினைத்தற் குரியது.

Scanned by CamScanner

25

# இசைத்தமிழ்

தமிழை, இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பாகுபாடு செய்து முத்தமிழ் என வழங்கினர். முத்தமிழுக்கும் உரிய எண்ணற்ற நூல்களை இயற்றித் தமிழை வளர்த்தனர். ஆயினும் இன்று இயற்றமிழுக்குரிய நூல்களே மிகுதியாக உள்ளன. முத்தமிழுக்கும் உரிய பழந்தமிழ் நூலாக இன்று விளங்குவது சிலப்பதிகாரம் ஒன்றுதான். இந்நூலினாலும் இதன் உரையினாலும் பழந்தமிழகத்தில் இசைத்தமிழ் மிக உயர்ந்த நிலையில் விளங்கியதை அறியலாம்.

## 1. தமிழ்நூல்களில் இசைக் குறிப்புகள்

தொல்காப்பியம் என்ற இயற்றமிழ் நூல் ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய பண், யாழ் ஆகியவற்றைக் கூறுகிறது. சங்க நூல்களில் பாணர், கூத்தர், பொருநர், விறலியர் முதலிய இசைக்கலைஞர்களின் வாழ்வும், அவர்கள் கையில் விளங்கிய யாழும் நன்கு வருணிக்கப்பட்டுள்ளன.

இமிழிசை யருவி, பறையிசை யருவி எனும் சொற்றொடர்களைக் கொண்ட புறப்பாடல் வரிகளைக் காணும் போது இயற்கையின் வாயிலாக இசையினைக் கண்ட தமிழனைக் காண்கிறோம். இக்கால மக்கள் பெரிதும் பயன்படுத்திய இசைக்கருவி யாழ். யாழிசையானது வண்டுகள் ஒலிப்பது போல் இசை யெழுப்புவதனை

**"பாணன் கையது பண்புடைச் சீறியாழ்**
**யாணர் வண்டின் இம்மென இமிரும்"**

என்ற நற்றிணை அடிகள் இயம்புகின்றன

**"ஒரு திறம் பாணர் யாழின் தீங்குழல் எழ**
**ஒரு திறம் யாணர் வண்டின் இமிழிசை எழ**
**ஒரு திறம் கண்ணார் குழலின் கரைபு எழ**
**ஒரு திறம் பண்ணார் தும்பி பரந்திசை ஊத"**

என வரும் பரிபாடல் வரிகள் இயற்கையின் இசைக்கூறுகள் செயற்கை இசையமைப்புகளுடன் பொருந்தி வருவதை விளக்குகின்றன.

Scanned by CamScanner

இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சிலப்பதிகாரம் தமிழர்களின் வாழ்க்கைக்குச் சுவையூட்டிய அனைத்துக் கலைகளையும் பதிவு செய்து காட்டுகிறது.

"யாழும் குழலும் சீரும் மிடறும்
தாழ்குரல் தண்ணுமை ஆடலொடிவற்றின்
இசைந்த பாடல் இசையுடன் படுத்து
வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்கி"

எனும் சிலப்பதிகாரப் பகுதி இசையிலிருந்து பண் பிறப்பதனையும் பண் தாளத்துடன் பொருந்திப் பாடலாவதையும் குறிப்பிடுவதைக் காணலாம். அறநூல் யாத்த திருவள்ளுவர்.

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

என்று தமிழிசையின் சிறப்பைக் கூறுகிறார். வழிப்போவாரைக் கொள்ளையடித்து வாழும் ஆறலைக்கள்வர், இசையின் வயப்பட்டுத் தம் கொலைத் தொழிலையும் மறந்து இருப்பர் என்றும், தினைப்புனத்தைக் காவல் செய்யும் பெண்ணின் இசையினிமையிலே மயங்கி, தினைக் கதிரை மேயவந்த யானை, அதனை உண்ணாது இசையைக் கேட்கும் என்றும் கூறும் சங்கப் பாடல்களால் தமிழசையின் சிறப்பை அறிகிறோம்.

## 2. இசைத்தமிழ் விளக்கம்

இசைத்தமிழ் என்பது பண்ணோடு கலந்தும் தாளத்தோடு கூடியும் இயங்கும் செந்தமிழ்ப் பாடல்களால் இயன்ற இலக்கியங்களும், அவற்றின் இலக்கணங்களும் அடங்கிய நூல்களின் தொகுதி எனலாம்.

பிற்காலத்தில் எழுந்த கீர்த்தனங்கள், வரிப்பாட்டு, சிந்து, ஆனந்தக் களிப்பு, கும்மி, தெம்மாங்கு முதலியன இசைத்தமிழில் அடங்கும். இராகத்தோடு மட்டும் பாடப்படும் பாட்டுக்கள் இயற்றமிழில் அடங்கும். இராகத்தோடு தாளமும் கூடினால் இசைத்தமிழ் என்று பெயர் பெறும்.

## 3. இசை நூல்கள்

பழங்காலத்தில் பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம் தாளவகையோத்து முதலிய இசைத்தமிழ் நூல்கள் நிலவின.

பிற்காலத்தில் கந்தபுராணக் கீர்த்தனை, பெரியபுராணக் கீர்த்தனை, சங்கீத சந்திரிகை ஆகிய இசைத்தமிழ் நூல்கள் எழுந்தன.

Scanned by CamScanner

## 4. இசைத்தமிழின் வீழ்ச்சியும் மீட்சியும்

சங்க காலத்தில் செழித்தோங்கி இருந்த தமிழர் கலைச்செல்வமாகிய பயிர் எல்லாம் அக்காலத்திற்குப் பிறகு முந்நூறு ஆண்டுகள் வரை வாடிக் கிடந்தன. களப்பிரர் என்ற வேற்றவரின் தலையீடே இதற்குக் காரணம். இவர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு மீண்டும் தமிழர் கலைகள் தளிர்த்தன. தமிழ் இசையை நாடெங்கும் சைவ, வைணவப் பெரியோர் பரப்பினர். அருள்கனிந்த தமது பக்திப்பாடல்களைப் பண்ணோடு கலந்து பாடினர். பக்தியினூடே தமிழ் இசையும் செழித்தது. சைவ சமயகுரவர்கள் அருளிய தேவாரம் தமிழுக்கே உரிய பண்ணும் திறமும் பயின்றனவாகி ஒளிர்கின்றது. தமிழிசையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்கள் இவர்களே. இசையின் இனிமையால் மக்களை ஈர்த்துப் பக்தி நெறியை அவர்களுக்குக் காட்டினர். ஆயினும் அக்காலத்தில் சிலர் இசையை வெறுத்தனர். ஒழுக்க நெறியைப் போதிக்க வந்த சமணர், இசைத்தமிழ் நூல்களை அழித்தும், இசைத் தமிழ் நூல்கள் தோன்றாமலும் செய்து விட்டனர். "வாழ்க்கைக்கு அறமே போதும்; மற்றும் இன்பம் வேண்டா" என்று கருதி, இசையானது இன்பத்தைத் தூண்டும் ஆகவே இசைக் கலையே வேண்டா என்று அவர்கள் ஒதுக்கினர். இந்நிலையில் இசைக் கலைஞர்கள் வாழ்வும் தாழ்வுற்றது. பழந்தமிழ் இசை மெல்ல மறக்கப் படலாயிற்று. இடைக்காலத்தில் தமிழின் நிலை இவ்விதம் இருந்தது. அக்காலத்திலேயே வடமொழியின் செல்வாக்கு தமிழ்நாட்டில் பரவலா யிற்று. புதிதாக வந்த வடவர் இசை வளரத் துணை புரிந்தனர். வடமொழியாளர் "மேளகர்த்தா" என்ற இசைநூலை இயற்றினர். இதனைப் பின்பற்றி எழுந்தனவே இன்றுள்ள இசை நூல்கள். பழந்தமிழ் இசையின் தன்மைகள் இவற்றிலே இருப்பதை இசை ஆராய்ச்சி அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

## 5. மராட்டிய மன்னர்களின் இசைப்பணி

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் காலத்தில் இசைக்கலை செழித்தது. இராகத்தை முதன்மையாகக் கொண்டது சங்கீதம். அதனோடு பாட்டுக்களும் அடங்கியது சாகித்தியம் எனப்படும். இவர்கள் சங்கீதத் தையே வளர்த்தனர். இசைக் கலைஞர்களும் காலத்திற்கேற்ப வாழ்ந்தனர். பொதுமக்கள் சாகித்தியத்தை விரும்பினர். தியாகராயர், தீட்சிதர், சாஸ்திரிகள் போன்ற இசைப் பெரியோர்கள் பல கீர்த்தனைகளை இயற்றியுள்ளனர். ஆயினும் இவை அனைத்தும் தமிழ்ப்பாடல்கள் அல்ல. இப்பெரியோர்களின் இசையைச் சிலர் சுவைத்தனர். பொருள்

Scanned by CamScanner

தெரியாமல் பலர் தவித்தனர். பொதுமக்களுக்கு விளங்கும் மொழியிலே பாட்டுக்கள் அமைத்து அவற்றை இசையெடுத்துப் பாடினால் பெரும் பயன் விளையும் என்று தமிழ் அறிஞர்கள் கருதினர். இசை அரங்குகளிலே தமிழ்ப் பாட்டுக்களைப் பாடச்செய்ய முயன்றனர்.

## 6. இசைத்தமிழ் வளர்த்த சான்றோர்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழிசை வளர்த்தவர்களில் கோபால கிருட்டிண பாரதியார், வேதநாயகம் பிள்ளை, அனந்த பாரதி, கனம் கிருஷ்ணையர், சுப்பராமையர், கவி குஞ்சரபாரதி ஆகியோரின் பணி எண்ணத்தக்கது. இருபதாம் நூற்றாண்டில் முப்பெரும் பெரியோர் கள் தமிழிசைக்குப் பெரும் தொண்டாற்றியுள்ளனர். ஆபிரகாம் பண்டிதர், விபுலானந்தர் ஆகிய இருவரும் தங்களுடைய படைப்பாலும் செட்டி நாட்டரசர் பணியாலும் இசைத்தமிழைப் பேணி வளர்த்துள்ளனர்.

### ஆபிரகாம் பண்டிதர்

கிறித்தவர்களின் இலக்கியப் பணியில் சுட்டிக்காட்டப்பட்ட அறிஞர். தமிழ்ப்பண்களை ஆராய்ந்து கருணாமிர்த சாகரத்திரட்டு என்ற இசைநூலினை வெளியிட்டவர். இந்நூல் இரண்டு தொகுதிகளாக அமைந்துள்ளது. முதல் தொகுதி சுருதிகள் பற்றிய நான்கு பகுதிகளைக் கொண்டது. இதில் இந்திய சிறப்பாகத் தமிழிசையின் தொன்மை பற்றியும், சுருதிகள் குறித்த பலருடைய கருத்து பற்றியும் தென்னகத்தில் வழங்கிவரும் பண்முறை பற்றியும் ஆய்பாலை, வட்டபாலை ஆகியவற்றில் உண்டாகும் சுரங்கள், சுருதிகள் பற்றியும் செய்திகள் இடம் பெற்றுள்ளன. இரண்டாம் தொகுதியில் கீதம் உண்டாகும் முறையும், அவற்றின் ஆதார சுரம் கண்டுபிடிக்கும் வழியும் ராக சஞ்சாரம் செய்கின்ற முறையும் எடுத்துக்காட்டப் பெறுகின்றன. தமிழிசை குறித்த படைப்பிலக்கிய நூல்களுள் இதுகிடைத்தற்கரிய பெட்டகம்.

### விபுலானந்தர்

அண்ணாமலைப் பல்கலைக்கழக முதல் தமிழ்ப் பேராசிரியர். தமிழ் ஆங்கிலம் வடமொழி மூன்றிலும் வல்லவர். இலங்கை நாட்டவர். பெற்றோர் வைத்த பெயர் மயில்வாகனன். துறவியாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட போது இராமகிருஷ்ண மடாலயத் தலைவர் சர்வானந்தர் குருபட்டம் சூட்டி விபுலானந்தர் எனப் பெயர் வைத்தார். இவருடைய படைப்பு யாழ் நூல் என்பதாகும். பதினான்கு ஆண்டுகள் செய்த முயற்சியின் விளைவாக மலர்ந்தது. வழக்கொழிந்து போன இசைநூல் இலக்கணத்தை வகுத்துரைப்பது. 103 பண்களின் உருவத்தைத்

Scanned by CamScanner

தருவது. இசைப்பதற்கு ஏற்ற அலகு நிலைகளைக் குறிப்பிட்டும் பல்லாண்டு மறைந்து கிடந்த பழந்தமிழிசை மரபிற்குப் புத்துயிர் அளிக்கும் நூலாகத் திகழ்கிறது. சிலப்பதிகார மாட்சியினை உலகிற்குத் தெரிவிக்கும் நூலாகவும் விளங்குகின்றது. யாழின் நுட்பத்தையும் நுணுக்கத்தையும் அர்த்தப்படுத்திக் காட்டிய அரிய நூல்.

**செட்டி நாட்டரசர்**

மறைமலையடிகள் கண்ட தனித்தமிழ் இயக்கம் போலத் தமிழிசை இயக்கம் கண்ட பண்பாளர். தமிழிசை புறக்கணிப்படுவதைக் கண்டு மனம் வருந்தி 1941இல் நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பதினாயிரம் வழங்கித் தமிழிசைப் பனுவல்களை யெல்லாம் வெளியிடத் தூண்டினார். அண்ணாமலை நகரில் முதல் தமிழிசை மாநாடு கூட்டிப் பெருமை சேர்த்தார். சென்னையில் தமிழிசைச் சங்கம் அமைய பொருளுதவி செய்தார். இன்று இத்தமிழிசைச் சங்கம் ஆக்கப்பூர்வமான இசைப்பணிகள் பல செய்து சிறப்போடு விளங்குகிறது. அண்ணாமலை அரசரும், இராசா. சர்.முத்தையா செட்டியாரும் தமிழிசையின் வளர்ச்சிக்குப் பங்காற்றி யுள்ளனர்.

**கோபாலகிருஷ்ண பாரதியார்**

ஆனந்தத் தாண்டவபுரம் பாரதியார், முடிகொண்டான் பாரதியார் என அழைக்கப் பெறுபவர். சிவபக்தி மிகுந்தவர். இயற்கை நாயனார் சரித்திரம், காரைக்காலம்மையார் சரித்திரம், திருநீலகண்ட நாயனார் சரித்திரம், நந்தன் சரித்திரம் முதலிய கீர்த்தனைகளைப் படைத்தவர். இவருடைய தமிழிசைப் பாடல்களை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நூலாக வெளியிட்டுள்ளது.

**கவி குஞ்சர பாரதியார்**

சிவகங்கை மன்னர் கௌரி வல்லப மகாராசர் வழங்கிய பட்டம் கவி குஞ்சரம் என்பது. மதுரை அங்கயற்கண்ணி மீது அடைக்கலமாலை, கயற்கண்ணி மாலை, திருவேங்கடமாலை, அழகர் குறவஞ்சி, திருமுருகவிலாசம் போன்றவையும் பல தனிப்பாடல்களும் இயற்றித் தமிழிசைப்பணி செய்தவர்.

**பாபநாசம் சிவன்**

ராமையா, ராமசாமி, சிவன் என்ற பெயர்களும் உண்டு. மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள் புனைந்துள்ளார். மக்களிடையே இசை வழி இறைப்பற்றை வளர்த்தவர். இராமசரிதையை இராகமாலிகை

Scanned by CamScanner

யாகப் பாடியுள்ளார். ஜெயதேவரின் அஷ்டபதியைத் தமிழில் மொழி பெயர்த்துத் தந்தவர் சங்கீதகலாநிதி விருது பெற்ற இசை அறிஞர்.

**யோகி சுத்தானந்த பாரதியார்**

வ.வே.சு. ஐயரின் உயிர்த்தோழர். சமுதாயப்பணி செய்த செம்மல். அச்சகம் அமைத்து 400க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்ட அறிஞர். இவர் பாடிய சங்கீத சாகரம் எனும் கீர்த்தனை நூலினால் கவியோகி எனப் பாராட்டப்பெற்றவர். அன்புமாலை, உலகப்பாட்டு, சன்மார்க்கப் பாடல், சாதனா கீதம், தேவகானம், நடனாஞ்சலி, முன்னேற்ற முழக்கம் போன்றவை இசைத்தமிழுக்கு இவர் தந்த கொடைகள். தமிழ்த் தியாகராஜர் என்றும் தேவகான ரிஷி என்றும் புகழப்படும் சிறப்பிற்குரியவர்.

**ப. சுந்தரேசனார்**

சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள பண் குறிப்புகளுக்கும், தேவார திவ்ய பிரபந்த பாடல்களுக்கும் இசை அமைத்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைக் கல்லூரியில் பணியாற்றித் தமிழ் இசையை வளர்த்தவர். பல ஊர்களுக்குச் சென்று தனித்தமிழ் இசைபற்றிய அறிவை ஊட்டியவர்.

**எம்.எம்.தண்டபாணி தேசிகர்**

அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக்கல்லூரித் தலைவராகப் பணியாற்றியவர். இசைத்தமிழ்பாமாலை என்ற நூலை இயற்றியதோடு குறள், சிலம்பு இரண்டுக்கும் இசையமைத்துக் கொடுத்துள்ளார். சங்கீத சாம்ராட், இசையரசு, முத்தமிழ் மணி போன்ற பட்டங்களைப் பெற்றவர்.

## இன்னும் பலர்

இசைத்தமிழை வளர்க்கும் சான்றோர்கள் இன்னும் பலர் இருக்கிறார்கள். குரல்வளத்தால் தமிழிசையை உயர்த்திய கே.பி.சுந்தராம் பாள், சீர்காழி கோவிந்தராஜன் போன்றோரும், சுத்த சத்வானந்தா, தூரன், மதுர பாஸ்கரதாஸ், சீர்காழி அருணாசலக்கவிராயர், முத்துத் தாண்டவர் போன்றோரும் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

## தொகுப்புரை

இசைத்தமிழின் வளர்ச்சி அறிஞர்களின் படைப்பாலும் பணியாலும் சிறப்புற்று விளங்குகிறது. மறைக்கப்பட்ட தமிழிசையை மீண்டும் உயிர்ப்பித்த சான்றோர்களின் பணி என்றும் நினைவில் கொள்ளத்தக்கது. இன்றைய தமிழ்ப்பாடல்களின் பெருக்கத்திற்கும் சிறப்பிற்கும் காரணமாக விளங்கிய தமிழிசைச்சான்றோர்களை வரலாறு என்றும் பேசும்.

Scanned by CamScanner

# 26

# நாடகத் தமிழ்

தமிழ் மொழியானது இயல், இசை, நாடகம் என்று முத்தமிழாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நெடுங்காலமாகவே முத்தமிழுக்கும் உரிய இலக்கண, இலக்கியங்கள் தோன்றி வளர்ந்திருக்க வேண்டும். ஆயின் மிகப் பழைய நாடக நூலோ அல்லது நாடகத்தை விளக்கும் நூலோ இப்போது கிடைக்கவில்லை. சிலப்பதிகாரம் ஒன்றுதான் முத்தமிழும் கலந்த காப்பியமாகக் கிடைத்துள்ளது. இதற்குப் பிறகும் சென்ற நூற்றாண்டு வரை, காளிதாசர், ஷேக்ஸ்பியர் போன்றோரின் நாடகங்களைப் போன்ற நாடக நூல்கள் தோன்றவில்லை.

## 1. தொல்காப்பியத்தில் நாடகக் குறிப்புகள்

இயற்றமிழ் இலக்கண நூலாகக் கொள்ளப்படும் தொல்காப்பியத்தில் "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என்று குறிக்கப்பட்டுள்ளது. அந்நூலின் பொருளதிகாரத்தில் மெய்ப்பாட்டியல் என்ற பகுதியில் நாடகத்திற்குப் பொருந்தும் பலவகை உணர்வுகளுக்கேற்ற மெய்ப்பாடுகள் கூறப்படுகின்றன. இதனால் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே தமிழில் பல நாடக இலக்கிய இலக்கண நூல்கள் இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. இவ்வுண்மை சிலப்பதிகாரத்தாலும், அதன் உரையாலும் உறுதிப் படுகிறது.

அடியார்க்கு நல்லார் என்ற சிலப்பதிகார உரையாசிரியர் தமது உரையில், மதிவாணர் நாடகத்தமிழ் நூல், முறுவல், சயந்தம் போன்ற நாடக நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றார். மேலும்,

> "கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
> போக்கும் அதுவிளிந் தற்று"

என்ற குறளும் இங்கு நினைத்தற்குரியது.

Scanned by CamScanner

## 2. சங்க காலத்திற்குப் பின் தமிழ் நாடகம்

சங்க காலத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் முந்நூறு ஆண்டுகள் வரை அயலவர் ஆட்சி நிலவியது. அயலவர் ஆட்சிக்காலத்தில் சமண, பௌத்த சமயங்கள் தமிழ்நாட்டில் செல்வாக்கு பெற்றன. இவர்கள் இசையையும் வெறுத்து ஒதுக்கினர். "இசையும் நாடகமும் மக்களிடையே காமத்தை மிகுவித்து அவர்களைத் தவறான வழியில் செல்லத் தூண்டும்" என்று நம்பினர். சமணர், பௌத்தர்களின் வீழ்ச்சிக்குப்பின் தோன்றிய நாயன்மார்களும், ஆழ்வார்களும், அருளும் பக்தியும் கனிந்த தனிப் பாடல்களையே இயற்றினர். அவை பண்சுமந்த பாடல்கள். எனவே இசைத் தமிழ் மட்டும் வளர்ந்தது. இவர்கள் காலத்திற்குப் பிறகு தமிழ்நாட்டை ஆண்ட சோழப் பேரரசர்கள் காலத்தில் அவர்களது வீரவரலாற்றைச் சித்திரித்துத் தமிழ்க் கவிஞர்கள் காவியம் பாடினர். அவை நாடகமாகவும் நடிக்கப்பெற்றன. மாபெரும் வேந்தனாக விளங்கிய ராசராசனின் வெற்றி வாழ்வைப் பற்றிய 'ராஜராஜ விஜயம்' என்ற நாடகம் தஞ்சைக்கோவிலில் நடிக்கப்பட்டது. இவ்வேந்தனுக்குப் பிறகு ஒரு நூற்றாண்டு கழித்து ஆண்ட குலோத்துங்கனைப் பற்றிக் 'குலோத்துங்க சோழ நாடகம்' என்ற நூல் தோன்றியது. கமலாலயபட்டர் என்பார், 'பூம்புலியூர் நாடகம்' என்ற நூலை இயற்றினார். ஆயின் இந்நாடக நூல்களெல்லாம் இன்று நமக்குக் கிடைக்கவில்லை.

## 3. பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில்...

17ஆம் நூற்றாண்டில் நாடகப் பண்பு நிறைந்த இலக்கிய வகைகள் சில தோன்றின. குறவஞ்சி, நொண்டி, பள்ளு போன்றனவே அவை. இவையே அக்கால நாடகங்கள். இவை பொதுமக்கள் விரும்பும் வகையிலே அமைந்ததால் பெருஞ்செல்வாக்குப் பெற்றன. பெருங் காவியங்களைப் படைக்கும் ஆற்றல் வாய்ந்த குமரகுருபரரும், காலத்திற்கேற்ப இத்தகைய நூலைப் படைத்தார். திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய திருக்குற்றாலக் குறவஞ்சி, மாரிமுத்துப்பிள்ளை பாடிய நொண்டி நாடகம், ஆசிரியர் பெயர் தெரியாத முக்கூடற்பள்ளு, இராமநாதக் கவிராயர் இயற்றிய சிவசைலப்பள்ளு என்பன இவ் விலக்கிய வகையுள் சிறந்தனவாகும். இக்காலத்திற்குப் பிறகு இதிகாசங்கள், புராணங்களிலிருந்து கதை மூலங்களை எடுத்து அவற்றை நாடக வடிவமாக்கினார். இராமாயண, பாரதங்களிலிருந்து அமைந்த பல நாடகங்கள் எழுந்தன. இசை இந்நாடகங்களில் மிகுதியாகக் கலந்தது. அருணாசலக் கவிராயர் இயற்றிய இராம நாடகம், சுவாமிநாதப்பிள்ளை

Scanned by CamScanner

எழுதிய இராம நாடகம், கந்தப்பிள்ளை எழுதிய இராமவிலாசம் என்பன இராமாயணத்தைக் கொண்டு எழுந்த நாடகங்களாகும். அபிமன்யு நாடகம், அதிருபாவதி விலாசம், அசோமுகி, அருச்சுன நாடகம், பாரத விலாசம், அல்லி நாடகம் ஆகிய நாடகங்கள் பாரதத்தைபொற்றி எழுந்தன. கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தன் சரித்திரம் புகழ் வாய்ந்தது. சில வரலாற்று நாடகங்களும் எழுந்தன. கண்டி நாடகம், ரங்கூன் சண்டை நாடகம் முதலியன வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டெழுந்த நாடகங்களாகும்.

### 4. பத்தொன்பதாம் நூற்றாண்டில்...

19ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியத்திலும் பல புதுமைகள் விளைந்தன. நாடக இலக்கியம் புத்துயிர் பெற்றது. இந்த ஒரு நூற்றாண்டில் மட்டும் 500க்கும் மேற்பட்ட நாடகங்கள் எழுந்தன. 100 நாடகங்களுக்கு மேல் அச்சிடப்பெற்றன. பெருங்காப்பியப் பண்புகள் நிறைந்த மனோன்மணீயமும், நாடக இலக்கணத்தைக் கூறும் நாடகவி யலும் இக்காலப் பகுதியில் தோன்றின.

#### வரலாற்று நாடகங்கள்

ஆங்கிலம், வடமொழி பயின்ற அறிஞர்களின் முயற்சியால் தழுவல், மொழி பெயர்ப்பு நாடகங்கள் எழுந்தன. மக்களிடையே வழிவழிக் கதையாகக் கூறப்பட்டு வந்தவை சில நாடக வடிவம் பெற்றன. மதுரைவீரன் விலாசம், நல்லதங்காள் நாடகம், ரவிவர்மா போன்றவை வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்டு எழுதப்பட்ட நாடகங்களாகும். சமுதாயத்தைச் சீர்திருத்தும் எண்ணத்தோடு பல நாடகங்கள் எழுதப் பட்டன. காசிவிசுவநாத முதலியார் என்பார் "டம்பாச்சாரி விலாசம்" என்று இவ்வகையில் ஒரு நாடகம் எழுதினார். தமிழில் எழுந்த முதல் சமூக நாடகமாகத் திகழ்கிறது.

#### மொழிபெயர்ப்பு நாடகங்கள்

வடமொழி, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் சிறந்து விளங்கிய நாடகங்களைத் தமிழில் சிலர் மொழி பெயர்த்தனர். இலக்குமணப்பிள்ளை என்பார் ஷேக்ஸ்பியர் எழுதிய சிம்பலின் நாடகத்தைப் போலத் தமிழில் சத்தியவதி என்ற நாடகத்தை இயற்றினார். சலசலோசனச் செட்டியார் என்பவரும் இதே ஆங்கில நாடகத்தைத் 'சரசாங்கி' என்ற பெயரில் மொழி பெயர்த்தார்.

Scanned by CamScanner

ஷேக்ஸ்பியரின் பிறிதோர் நாடகமான வெனிசு நாட்டு வணிகன் (The Merchant of Venice) என்ற நாடகத்தைக் கள்ளபிரான் பிள்ளை என்பர் செய்யுளும், உரைநடையும் கலந்த நடையில் மொழி பெயர்த்தார். ரோமியோவும், ஜூலியட்டும், ஒத்தெல்லோ போன்ற ஷேக்ஸ்பியரின் நாடகங்களைச் சங்கரதாஸ் சுவாமிகள் என்பார் மொழி பெயர்த்துள்ளார்.

டாக்டர் அ. சிதம்பரநாத செட்டியார், சுவாமி சுத்தானந்த பாரதியார், பேராசிரியர் நாராயணசாமி நாயுடு ஆகியோரும் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் பலவற்றை மொழி பெயர்த்துள்ளனர். பிரெஞ்சு நாடகமான 'லோபி'யைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளனர். சமஸ்கிருதத்தில் தலைசிறந்த நாடகங்களான சாகுந்தலத்தை மறைமலையடிகளும், மிருச்சகடிகத்தை 'மண்ணியல் சிறுதேர்' என்ற பெயரில் பண்டிதமணி கதிரேசஞ்செட்டியாரும் மொழி பெயர்த்துள்ளனர்.

**பேராசிரியர் சுந்தரம் பிள்ளை**

சிலப்பதிகாரத்திற்குப் பிறகு நல்ல நாடகக் காப்பியத்தை இயற்றிய பெருமை பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களைச் சாரும். இவர் இயற்றிய மனோன்மணியம், காப்பியப் பண்புகள் நிறைந்த ஒப்பற்ற நாடகமாகும். லார்டுலிட்டன் என்பார் எழுதிய The Secret Way என்ற ஆங்கிலக் கவிதையை அடிப்படையாகக் கொண்டு - தமிழின் நீர்மைக்கு ஏற்பச் செய்யுள் நடையில் படிப்பதற்கென்றும் நடிப்பதற்கென்றும் எழுதப்பெற்றது என்று ஆசிரியர் தம் முகவுரையில் எழுதியுள்ளார்.

தெளிந்த அனுபவமும், முற்றிய அறிவும் வாய்ந்த இப்பேராசிரியரின் இந்நாடகம் தமிழ் நாடக இலக்கியத்தில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது எனலாம். இதற்குப் பிற்கு செய்யுள் நடையில் பல நாடகங்கள் தோன்றின.

**வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரி**

பரிதிமாற் கலைஞர் என்ற வி.கோ.சூரியநாராயன சாஸ்திரியார் தமிழ் நாடகத்திற்கு அருந்தொண்டு ஆற்றியுள்ளார். இவர், நாடக இலக்கனத்தை அடிப்படையாகக் கொண்டு களவழி நாற்பது என்ற பழைய தமிழ் நூலில் அமைந்துள்ள கதையை அடிப்படையாகக் கொண்டு 'மான விஜயம்' என்ற ஓரங்க நாடகத்தையும் இயற்றினார்.

நாடகவியல் என்ற நாடக இலக்கண நூலை எழுதியதோடு கலாவதி, ரூபாவதி, சூர்ப்பணகை போன்ற நாடகங்களையும் படைத்தளித்தார்.

Scanned by CamScanner

## 5. இருபதாம் நூற்றாண்டில்...

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, வி.கோ.சூரியநாராயண சாஸ்திரி ஆகியோருக்குப் பிறகு தமிழ் நாடகத்தைச் சிறப்புற வளர்த்த பெருமை சங்கரதாஸ் சுவாமிகளுக்கும், பம்மல் சம்பந்த முதலியார்க்கும் உண்டு. அதன்பின் பல நாடக சபாக்களும் மன்றங்களும் தோன்றி வளர்ந்தன. நாடகக் கலையும் வளர்ந்தது.

### சங்கரதாஸ் சுவாமிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நாடகக் கலைக்குப் பெரும் தொண்டாற்றியவர். உரையாடல்களும் பாடல்களும் எழுதி நாடகக் கட்டுக்கோப்பை ஏற்படுத்தினார். ஒரு நாடகம் சிறப்பாக இருக்க வேண்டுமானால் நாடகத்தில் பங்கு கொள்ளும் நடிகர்களிடையே ஒழுங்கும் கட்டுப்பாடும் அவசியம் என்பதை வலியுறுத்தி வாழ்ந்தவர்.

அபிமன்ய சுந்தரி, அல்லி அர்ஜுனா, இலங்கா தகனம், கோவலன், சதி அனுசயா, சத்தியவான் சாவித்திரி, சதி சுலோசனா, சிறுதொண்டர், சிந்தாமணி, பவளக்கொடி, பிரகலாதா, நல்ல தங்காள், மணிமேகலை போன்ற நாற்பது நாடகங்களைத் தந்தவர். புராண நாடகங்களே இவருக்குப் புகழ் சேர்த்தன. தமிழ் நாடக மேதை, தமிழ் நாடகத் தலைமை யாசிரியர் என்ற சிறப்புகளுக்குரியவர் நடிகராகவும் விளங்கிப் புகழ் பெற்றவர்.

### பம்மல் சம்பந்த முதலியார்

தமிழ் நாடகக் கலைக்கு உயர்வையும் மதிப்பையும் ஏற்படுத்தி யவர். மக்கள் மத்தியில் நாடகக் கலையின் ஆற்றலை மெய்ப்பித்துக் காட்டியவர். தெருக்கூத்தாக நடைபெற்ற நாடகங்களை இன்றைய அமைப்பு முறைக்கு மாற்றியவர். சுகுண விலாசசபை நிறுவி நாடகங்களை அரங்கேற்றினார். வீரம், காதல், அரசியல், பக்தி, வாய்மை போன்ற பண்புகளுக்கு முதன்மை தந்து பாத்திரங்களைப் படைத்தார்.

மனோகரா, சபாபதி, வேதாள உலகம், காதல் கண்கள், பொன் விலங்கு, சுலோசனா சதி, கள்வர் தலைவன், இருநண்பர்கள், சதிசக்தி, வைகுண்ட வைத்தியர், புத்த அவதாரம், கலையோ காதலோ, பொன் விலங்குகள், விஜயரங்கம் போன்ற எண்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார். இவற்றுள் மனோகரா மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இவரது பணியினால் கூத்தாடிகள் என

Scanned by CamScanner

எள்ளப்பட்ட நடிகர்கள் கலைஞர்கள் என மதிக்கப்பட்டனர். நாடகம் படைத்து நடித்ததோடு நாடக மேடை நினைவுகள், நான் கண்ட நாடகக் கலைஞர்கள், நாடகக் கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி? நாடகத் தமிழ் போன்ற நாடகக் கலை குறித்த நூல்களையும் படைத்துள்ளார். ஆக்கம், நடிப்பு, இயக்கம் எனும் முப்பணியிலும் முத்திரை பதித்த இவர் தமிழ் நாடகத் தந்தை எனப் போற்றப்படுகின்றார்.

### கிருஷ்ணசாமிப் பாவலர்

பம்மல் சம்பந்த முதலியார் வழக்கறிஞர் வடிவேல் முதலியாருடன் சேர்ந்து நாடகப் பணியாற்றியவர். பால, மனோகர நாடக சபா அமைத்தவர். அரிச்சந்திரன், கோவலன், வள்ளித்திருமணம், தேசிங்கு ராஜன் போன்ற நாடகங்களால் பொது மக்களின் பாராட்டினைப் பெற்றவர். நாடகத்தின் வழி தேசியப்பற்றை மக்களிடையே பரப்ப, கதரின் வெற்றி, தேசியக் கொடி, பம்பாய் மெயில் போன்ற நாடகங்களைப் படைத்தார். முதன்மையான நடிகர், முன்னாள் முதல்வர் காலஞ்சென்ற எம்.ஜி.ஆர். இவரிடம் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

### டி.கே.எஸ். சகோதரர்கள்

ஸ்ரீ பாலசண்முகாநந்த சபா தோற்றுவித்து நாடகப்பணி செய்தவர்கள். சங்கரன், முத்துசாமி, சண்முகம், பகவதி நால்வரும் டி.கே.எஸ். சகோதரர்கள், தமிழகத்தில் மறைந்திருந்த நாடக ஆசிரியர் பலரைத் தேடிப்பிடித்து அறிமுகப்படுத்தினர். என்.எஸ்.கிருஷ்ணன், எஸ்.வி. சகஸ்ரநாமம், கே.ஆர்.ராமசாமி, எஸ்.எஸ்.ராஜேந்திரன், எம்.என். ராஜம் போன்ற புகழ்பெற்ற நடிகர்களை உருவாக்கிய பெருமை இவர்களுக்குண்டு. தேசியம், சமூகச் சீர்திருத்தம் போன்றவற்றை மையமிட்டுப் பல நாடகங்களை நடத்தினர். குமாஸ்தாவின் பெண், அந்தமான் கைதி, முள்ளில் ரோஜா ஆகிய நாடகங்கள் குறிப்பிடத்தக்கன. தமிழ்நாட்டில் இருபத்தைந்து ஆண்டுகள் நாடகப்பணியாற்றி சபையை நடத்திய பெருமையும் டி.கே.எஸ்.சகோதரர்களுக்கு உண்டு.

### நவாப் ராஜமாணிக்கம்

மதுரை தேவிபால விநோத சங்கீத சபையைத் தோற்றுவித்துப் பல நாடகங்களை நடத்திப் புகழ் பெற்றவர். சம்பூர்ண ராமாயணம், கிருஷ்ணலீலா, பக்த ராமதாஸ், மனோகரா, சக்திலீலா, ஏசுநாதர், ஞான சௌந்தரி, பிரபல சந்திரா, பிரேம குமாரி, குமார விஜயம், சபரிமலை ஐயப்பா போன்றவை இவருடைய நாடகங்கள். நாடகக் கலாநிதி,

Scanned by CamScanner

நாடகயோகி போன்ற பட்டங்களைப் பெற்றவர். நாடக உலகில் தெய்வீகமும் தேசியமும் தவழ, ஒழுக்கம் திகழ நற்பணியாற்றி நிலைத்த இடம் பிடித்த பண்பாளர்.

**எஸ்.வி.சகஸ்ரநாமம்**

சேவா ஸ்டேஜ் எனும் அமைப்பை ஏற்படுத்திச் சிறந்த நாடகப் பணியாற்றியவர். பாரதி, தி.ஜானகிராமன், கு.அழகிரிசாமி, கோமல் சுவாமிநாதன் போன்றோர் இவ்வமைப்பின் நாடக ஆசிரியர்கள். பிரசிடெண்ட் பஞ்சாட்சரம், மல்லியம் மங்களம், தேரோட்டி மகன், போலீஸ்காரன் மகள், வடிவேலு வாத்தியார், நாலுவேலி நிலம், பாஞ்சாலி சபதம், ஜீவனாம்சம் முதலிய குறிப்பிடத்தக்க நாடகங்கள் இவருடையது. நாடக ஆசிரியராகவும், நல்ல நடிகராகவும் புகழ் பெற்றவர்.

**ஆர்.எஸ். மனோகர்**

நேஷனல் தியேட்டர்ஸ் என்ற அமைப்பை உருவாக்கிப் புதுமைகள் செய்தவர். புராண நாடகங்களுக்கு முதன்மை தந்தவர். காட்சி அமைப்பு, அரங்க அமைப்பு ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்தி மக்களை வியப்பில் ஆழ்த்தியவர். இன்ப நாள், உலகம் சிரிக்கிறது, இலங்கேஸ்வரன், சாணக்கிய சபதம், காடக முத்தரையன், மாலிக்காபூர், சுக்ராச்சாரியார், பரசுராமன், துரோணர், விசுவாமித்திரர், நரகாசுரன், சூரபத்மன், இந்திரஜித், சிசுபாலன் போன்ற நாடகங்கள் மக்கள் அறிந்தவை. புராண வரலாற்றுக் கதைகள் கொண்டே நாடகத் தமிழ் வளர அரும்பணியாற்றிய இவரை நாடகத்திலகம், நாடகக் காவலர் எனப் போற்றிப் பாராட்டினர்.

**அவ்வை தி.க.சண்முகம்**

சங்கரதாஸ் சுவாமிகள், கிருஷ்ணசாமிப் பாவலர் ஆகியோரிடம் பயிற்சி பெற்றவர். எழுபத்து நான்கு நாடகங்களில் 109 பாத்திரங்களை ஏற்று நடித்த புகழுக்குரியவர். நடிப்புத் திறத்தால்'அவ்வை' எனும் சிறப்புப் பட்டம் பெற்றவர். தமிழ் நாடகத் தலைமையாசிரியர், நாடகக் கலை, நெஞ்சுமறக்குதில்லையே, எனது நாடக வாழ்க்கை போன்ற நாடகக் கலை தொடர்பான நூல்களைப் படைத்தவர்.

**பிற நாடக ஆசிரியர்கள்**

அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, சோ.ராமசாமி, கே. பாலச்சந்தர், பாரதி தாசன், பி.எஸ்.ராமையா, அரு ராமநாதன்,

Scanned by CamScanner

நாரண துரைக்கண்ணன், இந்திராபார்த்தசாரதி, கோமல் சாமிநாதன், கோரா ஏ.என். பெருமாள், ஆறு. அழகப்பன் போன்றோரின் நாடகப்பணியும் குறிப்பிடத்தக்கன.

அறிஞர் அண்ணா சந்திரோதயம் எனும் பிரச்சார நாடகத்தின் மூலம் நாடகப்பணியாற்றத் தொடங்கியவர். ஓர் இரவு, வேலைக்காரி, சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம், காதல் ஜோதி, சொர்க்கவாசல், இன்பஒளி, கண்ணாயிரத்தின் உலகம், நல்ல தம்பி முதலான சமூக சீர்திருத்த நாடகங்களைத் தந்து தமிழகத்தின் பெர்னாட்ஷா என்ற பெயரைப் பெற்றவர். நாடகங்களைப் படைத்ததோடு நடிக்கவும் செய்தவர். நாடகத்தில் இடம் பெறும் உரையாடல்கள் நினைத்து மகிழ்ந்து சிந்திப்பதற்குரியன.

கலைஞர் கருணாநிதி நாடகத்துறையில் புதுமையையும், திருப்பத்தையும் உண்டாக்கியவர். ஒரே முத்தம், தூக்கு மேடை, விமலா அல்லது விதவையின் கண்ணீர், மந்திரி குமாரி, மணி மகுடம், நச்சுக்கோப்பை, வாழ முடியாதவர்கள், நானே அறிவாளி, வெள்ளிக் கிழமை, உதயசூரியன், பரப்பிரம்மம், காகிதப்பூ, சிலப்பதிகாரம் முதலிய நாடகங்களைத் தந்தவர்.

சோ (ராமசாமி) அங்கத நாடகங்கள் படைப்பதில் தனிச்சிறப்பு வாய்ந்தவர். சாதல் இல்லையேல் காதல், ஜட்ஜ்மெண்ட ரிஸர்வ்ட், யாரிடமும் சொல்லாதே, நேர்மை உறங்கும் நேரம், சம்பவாமி யுகே யுகே, மனம் ஒரு குரங்கு, இரவில் சென்னை, இறைவன் இறந்து விட்டானா? முகமதுபின் துக்ளக், யாருக்கும் வெட்கமில்லை, வாய்மையே வெல்லும் போன்ற நாடகங்கள் இவருடையன.

கே. பாலச்சந்தர் நாணல், நீர்க்குமிழி, மெழுகுவர்த்தி, எதிர்நீச்சல், மேஜர் சந்திரகாந்த், சர்வர் சுந்தரம், சதுரங்கம் போன்ற நாடகங்களைப் படைத்தவர். இவற்றுள் பல திரைப்படங்களாக ஏற்றம் பெற்றுப் பெரு வெற்றியைத் தேடித்தந்தன.

பாரதிதாசன் கவிஞராக மட்டுமின்றிக் கலைஞராகவும் திகழ்பவர். இரணியன் அல்லது இணையற்ற வீரன், சௌமியன், கற்கண்டு, படித்த பெண்கள், கழைக்கூத்தின் காதல், சேர தாண்டவம், பிசிராந்தையார், இன்பக்கடல், நல்ல தீர்ப்பு போன்ற நாடகங்களைப் படைத்துப் பெருமை சேர்த்தவர். பள்ளிப்பருவத்தில் நாடகங்களில் நடித்த அனுபவமும் பாவேந்தருக்குண்டு.

Scanned by CamScanner

பி.எஸ்.ராமையா சிறந்த நாடக ஆசிரியர், தேரோட்டி மகன், பிரசிடெண்ட் பஞ்சாட்சரம், போலீஸ்காரன் மகள், பூவிலங்கு ஆகியன இவருடைய நாடகங்கள்.

அரு.இராமநாதன் இராஜஇராஜ சோழன் என்ற ஒப்பற்ற உயர்பெரும் நாடகத்தைப் படைத்தவர். வானவில் என்ற நாடகம் சாதியற்ற சமுதாயம், கலப்பு மணம் ஆகியவற்றை வலியுறுத்துவது.

நாரண-துரைக்கண்ணன் தீண்டாதவன் யார்? மாணிக்கவாசகர், தெய்வப்புலவர் திருவள்ளுவர், சதுரங்கம், பந்தபாசம், அகலிகை காதல், புலிக்குப் பிறந்தது போன்ற நாடகங்களைத் தந்தவர். வானொலி நாடகங்களைச் செறிவாகப் படைத்தளித்த சிறப்புக்குரியவர்.

இந்திரா பார்த்தசாரதி தேர்ந்த நாடக ஆசிரியர். சோதனை முறையிலான நாடகங்களைப் படைத்தவர். ஔரங்கசீப், பசி, போர்வைகள், இராமாநுஜர் போன்றவை இவருடைய தனித்துவமான படைப்புகள்.

கோமல் சுவாமிநாதன் சமுதாயப் பிரச்சனைகளையும், அவலங் களையும் நாடகத்தின் வழி கூறுவதில் ஆர்வம் கொண்டவர். பெருமாளே சாட்சி, தண்ணீர் தண்ணீர், ஒரு இந்தியக் கனவு, அனல்காற்று, யுத்த காண்டம், குமாரவிஜயம், ராஜபரம்பரை, பாலூட்டி வளர்த்த கிளி போன்றவை மக்களின் கவனத்தைத் திருப்பிய நாடகங்களாக அமைகின்றன.

கோரா கோ.ராஜசுந்தரம் எனும் பெயருடையவர், மலரும் மதுவும், மதியூகி மச்சான், சிபாரிசு, பிஞ்சுப்பழம், தன்மானமா! யார் கண்டது? கண்ணகியா மாதவியா, பெண்சாதி, முற்றுகை, நான் மட்டுமா? ஆசைத்தீ, கலகலத்த கடைக்கால், மலைமேடு போன்ற சிறந்த நாடகங்களைப் படைத்துப் பெருமை பெற்றவர்.

ஏ.என்.பெருமாள் நாடகத் தமிழ் பற்றி ஆராய்ந்து நூல்களைத் தந்தவர்களுள் முதன்மையானவர். பனிமொழி, பால்மதி, பீலிவளை, மானசீகை போன்ற நாடகங்களையும் படைத்துள்ளார். தமிழ்நாடகத்தன் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் நாடகம் ஓர் ஆய்வு, உலக அரங்கில் நாடகம் போல்வன நாடகம் குறித்து இவரெழுதிய திறனாய்வு நூல்களாகும்.

ஆறு.அழகப்பன் நாடகப் படைப்புப் பணியில் குறிப்பிடத் தகுந்தவர். வரலாறு, வாழ்க்கை வரலாறு, சமூகம், எள்ளல், இலக்கியம், எனும் ஐவகை தன்மையில் நாடகங்கள் படைத்துள்ளார். திருமலை

Scanned by CamScanner

நாயக்கர், முத்துச்சிப்பி, திருவள்ளுவர், எள்ளல் நாடகங்கள், நாடகச் செல்வம் போன்றன இவருடையது.

### நாடக மன்றங்கள்

நாடக மன்றங்கள் அமைத்து அதன் வழிப் பலர் தமிழ் நாடகக் கலைக்கு அருந்தொண்டாற்றியுள்ளனர்.

**ஸ்ரீமங்கள பாலகான சபா டி.பி.பொன்னுசாமிப்பிள்ளை** - இழந்த காதல், விமலா அல்லது விதவையின் கண்ணீர்.

**சக்தி நாடக சபா டி.கே. கிருஷ்ணசாமி**- விதி, ஜீவன், தோழன், பகல்நிலா, ஜஹாங்கீர், தேசபக்தர், சிதம்பரனார், வீரபாண்டியக் கட்டபொம்மன்.

**ஸ்ரீராமபாலகானசபா அருணாசலம் செட்டியார்** - குடும்ப வாழ்க்கை, தாகசாந்தி, திருமழிசையாழ்வார், பக்த சாருகதாசர், புயலுக்குபின்.

**எம்.ஜி.ஆர். நாடக மன்றம்** - இன்பக்கனவு, அட்வகேட் அமரன், சுமைதாங்கி.

**எஸ்.எஸ்.ஆர். நாடக மன்றம்** - மணிமகுடம், முத்துமண்டபம், புதுவெள்ளம், வெள்ளிக்கிழமை.

**எம்.என்.நம்பியார் நாடக மன்றம்** - கல்யாண சூப்பர் மார்க்கெட்.

**என்.என்.கண்ணப்பா நாடக மன்றம்** - கவிச்சக்கரவர்த்தி கம்பர், குலப்பெண், யுகசந்தி.

மேற்குறித்த நாடக சபாக்களிலும், மன்றங்களிலும் நடித்துக் கலையை மெருகூட்டிய நடிகர்கள் பலர் பின்னாளில் முன்னணித் திரைப் பட நடிகர்களகப் புகழ் பெற்று நாட்டை ஆளும் தகுதியைப் பெற்றனர் என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

## 6. தமிழ் நாடகத்தில் சோதனை முயற்சிகள்

தமிழ் நாடகமேடையில் பல்வேறு மாற்றங்களைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் காணலாம். தமிழ் நாடகத்தில் சங்கரதாஸ் சுவாமிகளும், சம்பந்த முதலியாருமே முதன் முதலாகச் சோதனை முயற்சிகளை மேற்கொண்டனர். பாடல்களின் முரட்டுத் தன்மையை நீக்கி எளிமைப்படுத்தினர். தெருக்கூத்தாக இருந்த தமிழ் நாடகத்தை மேடை ஏற்றி வெற்றி பெற்றனர். காலவரையறையைக் கருத்தில் கொண்டு செயல்பட்டனர். புராணங்களின் பிடியில் இருந்து தமிழ் நாடகத்தை விடுவித்தது ஒரு நல்ல முயற்சி. கன்னையா என்பவர்

Scanned by CamScanner

1900களில் முப்பரிமாண அமைப்பு முறையில் ஒரே மேடையில் மூன்று அரங்குகளை அமைத்தார். காலங்கள் தோறும் தமிழ் நாடகங்களில் தொடர்ந்து பல சோதனைகள் நிகழ்ந்துள்ளன. இன்று தமிழ்நாடகத்தின் கதை, வசனம், உரையாடல், நடிப்பு, மேடை, ஒப்பனை, காட்சி அமைப்பு, அலங்காரம், ஒலி-ஒளி ஆகியவற்றில் புதிய சோதனைகள் செய்யப் பட்டுள்ளன.

**நடப்பியல் நாடகம்**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிந்தனையாளர்களில் இரு பிரிவு ஏற்பட்டது. ஒரு பிரிவினர் நடப்பியல் (Realistic) முறையினர். இன்னொரு பிரிவினர் (Naturalistic) இயற்கைவாதிகள் எனப்பட்டனர். இலக்கியத்தில் ஏற்பட்ட இத்தாக்கம் நாடகத்தையும் பாதித்தது. நாடக உலகில் இயற்கை வாதம் என்பதும், நடப்பியல் முறை என்பதும் ஒரு பாணி. இயற்கைவாதம் நடை அல்லது உருவத்தை அடிப்படையாகக் கொண்டது. வாழ்க்கையின் புறப்பகுதியை மட்டும் நுணுக்கமாகக் காட்டும். நடப்பியல் முறை வாழ்க்கையின் பிரதிபலிப்பைக் காட்டுவ தோடு மனித மனத்தின் நுண்ணிய உணர்வுகளுக்கு அதிக மதிப்புக் கொடுக்கும். வாழ்க்கையின் அடிப்படை உண்மைகளை விளக்கும்.

தமிழில் நடப்பியல் முறையில் சோதனை மேற்கொண்டவர் சி.சு. செல்லப்பா. இவரது நாடகம் 'முறைப்பெண்' மதுரை மாவட்டத்தில் தேவர் சமுதாயத்தைச் சார்ந்த ஒரு குடும்பத்தில் முறைமை, வளமை தொடர்பாக எழுந்த 'கௌரவப் பிரச்சினையே நாடகத்தின் சிக்கல்.' இவர்களுடைய ஆவேசம், தகராறு எல்லாம் பொது உறவு அறாத நிலையிலேயே அமைகிறது. அவர்களிடம் மேலோங்கி இருக்கிற முரட்டுக்குணம், பேச்சு, உணர்ச்சி ஆகியவை நடப்பியல் பாங்கிற்கேற்ப அமைந்துள்ளன.

**இழிதல் நாடகம் (Theatre of Absurd)**

நாடக உலகில் பெரும் இயக்கமாக வளர்ந்த சோதனை முயற்சி. Absurd என்பது ஒன்றும் அற்றது. பொருள் அற்றது என்பதாகும். மனிதன் தன்னோடு தொடர்புடைய மதம், தத்துவம், தத்துவம் கடந்த சூழ்நிலை ஆகியவற்றிலிருந்து துண்டிக்கப்பட்டு நம்பிக்கையிழந்து வாழ இயலாத நிலையில் அவனின் செயல்கள் நோக்கமற்றதாகவும், பயனற்றதாகவும், பொருளற்றதாகவும் போகும். இழிதல் நாடகம் இந்தப் பொருளற்ற தன்மையைக் கருவாகக் கொண்டது மட்டுமல்லாமல் வாழ்க்கையின் அர்த்தமற்ற தன்மை, அதன் இலக்குகள், தூய்மை, நோக்கம் போன்ற பண்புகள் மதிப்பிழந்து நிற்கும் நிலையையும் காட்டுவதாக அமையும்.

Scanned by CamScanner

இழிதல் நாடக வடிவ அமைப்பில் கதை, கதை வளர்ச்சி, பாத்திரப் படைப்பு போன்ற எவையும் முழுமை பெறாமலும், தெளிவு பெறாமலுமே அமைந்திருக்கும். உரையாடல்கள் ஒன்றோடொன்று தொடர்பற்று முரண்பட்டுக் காணப்படும். மேல் நாடுகளில் ஆதிக்கம் பெற்றுவிளங்கிய இத்தகைய நாடகப் போக்கு தமிழ் நாடகங்களிலும் பாதிப்பினை ஏற்படுத்தியது. இந்திரா பார்த்தசாரதியின்'பசி' என்ற நாடகம் இந்த வகையில் அமைந்த நல்ல நாடகம்.

**அங்கதம் (Satire)**

அங்கத நாடகத்தில் கருத்து ஊடகமாக இருக்கும். சமுதாயச் சீர்கேடுகளையும். தீய சக்திகளின் பாதிப்பையும் உணர்த்த வேண்டிய சூழ்நிலையில் ஆசிரியர் மேற்கொள்ளும் உத்தி எள்ளல் உரையாடல். மக்களைச் சிரிக்க வைத்துச் சிந்திக்கத் தூண்டும் சமுதாயக் குறைபாடு களும், மனிதனுடைய குறைபாடுகளும், தவறுகளும் எள்ளி நகையாடப் படுவதன் மூலம் கண்டுபிடிக்கப்படுகின்ற நிலையில் அங்கதமாக அமையும். இல்லையெனில் அது புனைவு இன்பியல் (Romantic Comedy) என்ற நிலையை அடையும்.

தமிழ் நாடகத்திலும் அங்கத முறை சோதனை செய்து பார்க்கப் பட்டது. முழுவெற்றி பெற்றவர் சோ.இராமசாமி ஆவார். யாருக்கும் வெட்கமில்லை என்பது இவரது அங்கதப் படைப்புகளில் ஒன்று. அரசியல்வாதிகளின் அறியாமை, அநாகரிகப் பேச்சு, கொள்கை இல்லாத் தன்மைகள், போலித்தனம், ஊழல் ஆகியவை எள்ளி நகையாடப் பெறுகின்றன. சமுதாயம் கண்டனத்திற்கு ஆளாகிறது. கழகம், கட்சி ஆகியவற்றின் கொள்கைகள் கடுமையாகச் சாடப்படுகின்றன. அங்கதத் தன்மை கதையில் வலுவாக அமைந்திருக்கிறது.

**உளவியல் நாடகங்கள் (Psychological Plays)**

இந்திராபார்த்தசாரதி பல புதிய பொருள்களைத் தமிழ் நாடகத்தில் சோதித்துப் பார்த்துள்ளார். அதன் விளைவாகச் சில உளவியல் நாடகங்கள் மேடையில் அறிமுகமாயின. அவற்றுள் கால இயந்திரங்கள், மழை ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

மழை என்ற நாடகம் மகளுக்குத் தந்தை மீது ஏற்படுகின்ற பாலுணர்வை மையமிட்டதாக அமைகின்றது. இதனை 'எலெக்ட்ரா சிக்கல்' (Electra Complex) என்பர். இச்சிக்கல் நாடகத்தை இழிதல்

Scanned by CamScanner

தன்மைக்கும் உளவியல் போக்கிற்கும் உட்படுத்துகின்றது. தமிழ் நாடக மேடைக்குப் புதிய கதை. ஒரு வீட்டில் நடைபெறுகிற உரையாடலிலேயே கதை முடிந்துவிடுகிறது.

கால இயந்திரங்கள் என்ற நாடகம் தன் உடம்பின் மீது தனக்கு ஏற்படுகின்ற ஆசையை மையமிட்டு எழுதப்பட்ட புதிய சோதனை முயற்சி. இதனை 'நார்ஸிஸஸ் சிக்கல்' (Norcisu Complex) என்பர். இம்முறையும் தமிழ் நாடகத்திற்குப் புதியது. இந்நாடகத்தில் இழிதல் தன்மையும் உளவியல் சிக்கலும் மேலோங்கி நிற்கின்றன.

**பார்வையாளர் பங்கேற்கும் உத்தி (Audience Participation)**

நாடகம் நன்கு பரிணமிக்க மூன்று கிக்கள் தேவை என்பர் இப்ஸன். அவையாவன ஆசிரியர் (Author) கலைஞர் (Actor) பார்வையாளர் (Audience) இவர்களில் பார்வையாளர்களையும் நாடகத்தில் ஈடுபடுத்தும் ஒரு முயற்சி ஏற்பட்டது. இதனையே பார்வையாளர் பங்கேற்கும் உத்தி என்பர். இவ்வுத்தியைப் போர்வை போர்த்திய உடல்கள் என்ற நாடகத்தில் இந்திராபார்த்தசாரதி பயன்படுத்தியுள்ளார். பார்வையாளர் களையும் இணைத்தே நாடகம் செல்கின்றது. கதை மாந்தர் பார்வையாளர் களுடன் கலந்து இடம் பெறுகின்றனர். இவ்வுத்தியால் பார்வையாளர்கள் நாடகம் பார்க்கிறோம் என்ற உணர்வு நீங்கி இயல்பாக நடைபெறுகிற நிகழ்ச்சியைப் பார்ப்பது போன்ற உணர்வினைப் பெறுகின்றனர். இவ்வுத்தியைச் சிறப்பாகப் பயன்படுத்திய மற்றொருவர் ஜெயகாந்தன்.

## 7. சோதனை நாடக இயக்கங்கள் (Movement of Experimental Dramas)

இன்று தமிழ் நாடக மேடையில் புதிய சோதனைகளை மேற் கொள்ளும் பல சோதனை நாடக இயக்கங்கள் உள்ளன. மக்களுக்கு அறிவுரை வழங்கி, அறியாமையை அகற்றி நல்வாழ்வு வாழ எளிய முறையில் வழிகாட்டவேண்டும் என்ற சமூக உணர்வோடும் நோக்கோடும் நடத்தப்பட்டு வருவதைச் சோதனை நாடக இயக்கம் எனலாம். சோதனை நாடகங்களில் கருத்து விளக்கத்திற்குச் சிறப்பிடம் தரப்படுகிறது.

மக்களுக்கு நடப்பு உண்மைகளை உணர்த்தி நாடு, சமுதாயம் ஆகியவற்றில் காணலாகும் முரண்பாடுகளை விளக்கி நிறைவான வாழ்வுக்கு மக்களை வழிப்படுத்த வேண்டும் என்பது சோதனை நாடகங் களின் முழுநோக்கம். இந்நோக்கங்களுடன் செயல்படும் இயக்கங்கள் குறிப்பிடத்தக்கன.

Scanned by CamScanner

**நிஜநாடக இயக்கம்**

நாடகம் என்பது கற்பனைகளோ கேலிக்கூத்துகளோ இல்லாமல் உண்மையாக அமைதல் வேண்டும் என்ற கொள்கையோடு இயங்குகிற இயக்கமே'நிஜ நாடக இயக்கம். 1977இல் டாக்டர்.மு.இராமசாமி என்பவரால் மதுரையில் தொடங்கப்பட்டது. வெத்து வேட்டு, ஸ்பார்டகஸ் ஆகிய நாடகங்கள் குறிப்பிடத்தக்கன. குமரி மாவட்டத்து மக்கள் கலை இலக்கியப் பெருமன்றத்தினர் இன்று மிகச் சிறப்பாக நிஜ நாடகங்களை நடத்தி வருகின்றனர்.

**வீதிநாடக இயக்கம் (Street Theatre)**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜெர்மன், இத்தாலி, பிரான்ஸ், ரஷ்யா போன்ற நாடுகளிலும் பின்னர் அமெரிக்காவிலும் இவ்வீதி நாடக இயக்கம் தோன்றியது. இந்தியாவில் வங்காளம் முதன் முதலில் இவ்வியக்கத்தைப் பரவலாக்கியது. வீராசாமி அவர்கள் பங்கேற்று நடத்துகிற 'Community Theatre' என்ற அமைப்பிலான குழு, வீதி இயக்கத்தில் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

சென்னை நகரின் கடற்கரை, பிற முக்கிய இடங்களில் எந்த முன்னறிவிப்பும் இன்றித் திடீரென்று தோன்றி அங்கு வருகிற பார்வை யாளர்களைத் தொடர்புபடுத்தி மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை நாடகமாக்கி அவர்களைச் சிந்திக்கத் தூண்டும் முயற்சியில் இவ்வியக்கம் ஈடுபட்டுள்ளது.

**பரீட்சா இயக்கம்**

நாடகத்தை உண்மையாக மக்களிடம் கொண்டு செல்ல அரங்கேற்றுதல் என்னும் நோக்குடன் புதுமை செய்யும் இயக்கமாகத் தோன்றியது பரீட்சா எனும் நாடக இயக்கம். இதன் ஆசிரியர் ஞாநி. ஏன், நாற்காலிக்காரர், காலம் காலமாக, போர்வை போர்த்திய உடல்கள், முட்டை, மூர்மார்கெட், மனுஷா, வயிறு போன்ற தரமான நாடகங்களை இவ்வியகத்தினர் அரங்கேற்றியுள்ளனர்.

**கூத்துப்பட்டறை (Theatre Workshop)**

பழைய தமிழ் நாடகமாகிய தெருக்கூத்துக்குப் புதுவடிவம் கொடுப்பதே இவ்வியக்கத்தின் நோக்கம். இதன் ஆசிரியர் ந.முத்துசாமி. கீசகவதம், சுவரொட்டிகள் ஆகிய நாடகங்கள் கூத்துப் பட்டறையினர் 'அரங்கேற்றிய நாடகங்களாகும்' இவை தவிர தஞ்சையில் துளிர் என்ற இயக்கமும் மதுரையில் சுதேசிகன் என்ற அமைப்பும் புதுவையில்

Scanned by CamScanner

சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைப் பள்ளியும் பல சோதனைகளை நிகழ்த்தி வருகின்றன.

தமிழ்நாடகக்கலை கூத்தாகத் தோன்றிப் புராணக் கதைகளை மையமிட்டுப் பின் மக்களின் மன இயல்புகளைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடியாக விளங்கி மேல்நாட்டு நாடகத் தொடர்பால் உயர் நிலை அடைந்து நிற்கிறது. தமிழ் நாடகம் பெற்றுள்ள வளர்ச்சி இப்பொழுது ஏமாற்றத்தைத் தருகிறது.

மேல்நாட்டு நாடக வளர்ச்சியோடு ஒப்பிட்டுக் காணுகின்ற பொழுது சில கசப்பான உண்மைகளை உணரவேண்டியிருக்கிறது. மாஸ்கோவில் உள்ள 'போல்ஷாய்' திரையரங்கில் நாடகக் கலைக்கெனத் தங்களை அர்ப்பணித்த நாடகக் குழுக்கள் ஆண்டு முழுவதும் அரசின் ஆதரவையும் மக்கள் ஆதரவையும் பெற்றுப் பல சோதனைகள் செய்து வருகின்றன.

இது போன்று தமிழ்நாட்டிலும் முயற்சி உருவாகுமானால் தமிழ் நாடகம் உலக அரங்கில் உயர்ந்த இடத்தைப் பெறும்.

Scanned by CamScanner